சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

——o——

வைதிக சுத்தாத்துவித

சைவசித்தாந்த தத்துவப்பட

விஞ விடை

——o——

இது

காசிவாசி. செந்திநாதையரால்

இயற்றி

தமது

திருமங்கலம்

செந்திநாதசுவாமி யந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

———

பிலவங்கஞ கார்த்திகைமீ

கஅ௦எ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

உபோற்காதம்.

புண்ணியபூமியாகிய பரதகண்டத்திலே வழங்கிவரும் மத்துவம், வைணவம், ஏகான்மவாதம், சிவாத்துவிதம், சுத்தாத்துவித சைவசித்தாந்தம் என்னும் வைதிக மதங்களுள்ளே, மத்துவமதமும் வைணவமதமும் நாராயணர் சகுணவழிபாட்டினும், ஏகான்மவாதம் நிர்க்குணோபாசனையினும், சிவாத்துவிதம் அத்தியாசிரம பாசுபத யோகத்தினும், சுத்தாத்துவித சைவசித்தாந்தம் ஞானபாதத்தினும் அமைவனவாமென்றும், சகுணோபாசனை முதற்படிக்கண்ணும் (1st Stage), நிர்க்குணோபாசனை இரண்டாவதுபடிக்கண்ணும் (2nd Stage), சிவாத்துவிதம் மூன்றாவது படிக்கண்ணும் (3rd Stage), சுத்தாத்துவித சைவசித்தாந்தம் நான்காவது படிக்கண்ணும் (4th Stage) நிலையுறுவனவாம் என்றும், நாராயணம் சுபாலமுதலிய நாராயணோபநிடதப் பொருள்களும், இவ்வுபநிடதங்களுக்கியைய இராமாநுஜர்களாற் பொருள் திரித்து இயற்றப்பட்ட ஈசகேநாதி வைணவ பாடியப் பொருள்களும், பிரமசூத்திர வைணவ பாடியப்பொருள்களும், நாலாயிரப்பிரபந்தப் பொருள்களும், பாஞ்சராத்திராகமப் பொருள்களும் சகுணோபாசனையினும்; சர்வசாரம், நிராலம்பம், தேஜோவிந்துமுதலிய ஏகான்மவாதப் பொருள்களும், இவ்வுபநிடதங்களுக்கியைய வலிந்து பொருள் திரிவுபடுத்திச் சங்கராசாரியரால் இயற்றப்பட்ட ஈசகேநாதி ஏகான்மவாத பாடியப் பொருள்களும், பிரமசூத்திர ஏகான்மவாத பாடியப்பொருள்களும், இரத்திநப்பிரபை, பாமதி, நியாய நிர்ணயம், கற்பதரு, பரிமளம், பிரமானந்தீய முதலிய வடமொழி வியாக்கியானங்களும், சித்தாந்தலேச சங்கிரகம், சிற்சுகிமுதலியவும், இவற்றை ஆதாரமாய்க்கொண்டு தமிழிலே கிளர்ந்த கைவல்லிய நவநீதம், பஞ்சதசப்பிரகரணம், ஞானவாசிட்டம், ரிபுகீதை, பிரமகீதை பிரபோதசந்திரோதயம், வேதாந்த சூடாமணி, தத்துவராயர்பாடல், விசாரசாகரம், விசாரசந்திரோதயமுதலிய ஏகான்மவாத நூற்பொருள்களும் நிர்க்குணோபாசனையினும்; ஸ்ரீநீலகண்டசிவாசாரியரால் ஈசகேநாதி உபநிடத மந்திரங்களுக்கும், இவற்றை ஆதாரமாய்க்கொண்டு கிளர்ந்த பிரமசூத்திரத்துக்கும் பொருட்டிரிவுபடுத்தாது சத்தியார்த்தமுற இயற்றப்பெற்ற சிவாத்துவித சைவபாடியப்பொருளும் அத்தியாசிரம பாசுபதயோகத்தினும், சிவஞானபோதம் ஞானபாதத்தினும் முற்றி நிற்பனவாம் என்றும் உணர்த்துமாறு நாம் இயற்றிய சுத்தாத்துவித சைவசித்தாந்த தத்துவப்படத்தின் தத்துவங்களை நிரூபித்து விளக்குமாறு வரையப்பட்டது இந்த வைதிக சுத்தாத்துவித சைவசித்தாந்த தத்துவப்பட வினாவிடையாம்.

இந்த வினாவிடை அச்சிடுமாறு திரவியசகாயஞ்செய்த சிவநேசர்கள்:—

1. ம-ள-ள-ஸ்ரீ சிதம்பரநாத முதலியாரவர்கள், மிட்டாதார், சீகாழி.
2. ,, ஸ்ரீநிவாசம்பிள்ளையவர்கள், வைக்கீல், தஞ்சை.
3. ,, மு. ரா. ம. சி. லெ. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள், தேவிகோட்டை.

குறிப்புவிளக்கம்.

அ. சி=அதர்வசிகோபநிடதம்
இரு. வே=இருக்குவேதம்
இலிங். உத்=இலிங்கபுராண உத்தர பாகம்
இலிங். பூரு=இலிங்கபுராண பூருவ பாகம்
ஈசா=ஈசாவாசியோபநிடதம்
ஐத=ஐதரேயோபநிடதம்
க=கடோபநிடதம்
கி. ய. வே=கிருஷ்ணயசுர்வேதம்
கே=கேநோபநிடதம்
கூர்=கூர்மபுராணம்
கை=கைவல்லியோபநிடதம்
ச. உ=சங்கரசங்கிதை உபதேச காண்டம்
ச. த=சங்கரசங்கிதை தக்ஷகாண்டம்
ச. ப=சதபதப்பிராம்மணம்
ச. ரு=சதருத்திரீயம்
சா=சாந்தோக்கியோபநிடதம்
சா. வே=சாமவேதம்
சாங்=சாங்கியசூத்திரம்
சர்வ=சர்வசாரோபநிடதம்
சி=அதர்வசிரோபநிடதம்
சி. க. பா=ஸ்ரீகண்டபாடியம்
சித். ஞான=சித்தாந்த சாராவளி ஞானபாதம்
சூ. சூ=சூதசங்கிதை சூதகீதை
சு. ய. வே=சுக்கிலயசுர்வேதம்
சுவே=சுவேதாசுவதரோபநிடதம்
சை. கை=சைவபுராண கைலாச சங்கிதை
சை. வா. Pt. I=சைவபுராண வாயு சங்கிதை பூருவ பாகம்
சை. வா. Pt. II=சைவபுராண வாயு சங்கிதை உத்தர பாகம்
தை=தைத்திரீயோபநிடதம்
பிரு=பிருகதாரணியோபநிடதம்
பிருக=பிருகச்சாபாலோபநிடதம்
நிரா=நிராலம்போபநிடதம்
ப. ஆ=பவுட்கராகமம்
பிர=பிரசிநோபநிடதம்
ம. நா=மகாநாராயணோபநிடதம்
மகாபா=மகாபாரதம்
மாண்டூ=மாண்டூக்கியோபநிடதம்
முண்ட=முண்டகோபநிடதம்

பிரணவம்.

பிரணவம் தேவநாகரலிபியிற் காணப்படும் ஆகிருதியாயிருக்கவேண்டுமா? கிரந்தலிபியிற் காணப்படும் ஆகிருதியாயிருக்கவேண்டுமா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) நாகரலிபியிற் காணப்படும் பிரணவாகிருதியாயிருக்க வேண்டும்; ஆரியா தேசத்தில் வழங்கப்படுவதொன்றுகலானும், தேவ என்னும் விசேடணத்தோடியைந்து தேவநாகரி எனப்படுதலானுமாம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். அது ஒவ்வாது; கிரந்தலிபியிற் காணப்படும் பிரணவாகிருதியே கோடற்பாற்று;

परा वागीश्वरी विद्या माया विद्या परा स्मृता ।
परबिन्दुः पराशक्तिः महामाया च कुण्डली ।
........तस्याः पर्यायवाचकाः ॥

"பரை, வாகீசுவரி, வித்தை, மாயை, பராவித்தை, பரவிந்து, பராசத்தி, மகாமாயை, குண்டலி என்பன (பிரணவகுண்டலியின்) பரியாயநாமங்கள்" என்று சிந்தியவிசுவசாதாக்கியத்திற் காணப்பட,

प्रणवो धनुः ।

1. "பிரணவம் வில்லு" என்று முண்டகோபநிடதத்திற் கூறப்படலானும்,

नाभिदेशे प्रतारंगाहिकुण्डली हंसध्वनिः सदा ।

2. "மூலநாடியாயும், வளைந்த சர்ப்பவடிவமாகிய குண்டலியாயும், ஹம்சத்தொனியுடையதாயுமுள்ளது (பிரணவம்)" என்று ஞானசித்தியாகமத்திற் கூறப்படலானும்,

प्रथमं तारकाकारं द्वितीयं दण्डमुच्यते ।
तृतीयं कुण्डलाकारं चतुर्थं ह्यर्धचन्द्रकम् ।
पञ्चमं बिन्दुसंयुक्तं प्रणवं पञ्चलक्षणम् ॥

3. "முதலாம் உறுப்பு நக்ஷத்திர வடிவமாயும், இரண்டாம் உறுப்பு தண்ட வடிவமாயும், மூன்றும் உறுப்பு குண்டலாகாரமாயும், நான்காம் உறுப்பு அர்த்தசந்திரவடிவமாயும், ஐந்தாம் உறுப்பு விந்துவோடியைந்ததாயுமுள்ள ஐந்து இலக்கணமுடையது பிரணவம்" என்று சிவாகமத்திற் கூறப்படலானும்,

शिरश्चोत्तरतो यस्य पादौ दक्षिणतस्तथा ।
यश्च सर्वेषां तत्र साक्षा ओंकारोऽहं श्रोत्रकः ॥

4. "(எழுத ஆரம்பிக்குங்கால்) எதற்குச் சிரசு வடபுறத்தினும், (முடிக்குங்காற்) பாதம் தென்புறத்தினும் இருக்கின்றதோ, எது எல்லா

வற்றுக்கும் மேலாய் உள்ளதோ, அந்த மும்மாத்திரையுடைய சாக்ஷாத் பிரணவம் நான்" என்று பதுமபுராணசிவகீதையிற் கூறப்படலானும்,

𑌮𑌾𑌯𑌾 𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌿𑌨𑍀 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌂 𑌜𑌗𑌦𑍇𑌤𑌤𑍍 𑌚𑌰𑌾𑌚𑌰𑌮𑍍।

5. "உலகத்துச் சராசரப்பொருளனைத்தும் மாயையாம் குண்டலியால் வியாபிக்கப்பட்டது" என்று ஞானசித்தியிற் கூறப்படலானும்,

𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌪𑌦𑍍𑌮𑌵𑌨𑍇 𑌶𑌙𑍍𑌖𑌾𑌵𑌰𑍍𑌤𑍇 𑌸𑌂𑌵𑌾𑌕𑍃𑌤𑌿 𑌶𑍍𑌰𑌿𑌯𑍇।
𑌤𑌤𑌃 𑌕𑌾𑌲𑍇 𑌤𑌦𑌾 𑌦𑌕𑍍𑌷𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿 𑌸𑍁𑌤𑌾𑌙𑍍𑌗𑌿𑌕𑌃।
𑌤𑌤𑍍𑌰 𑌪𑌦𑍍𑌮𑌾𑌸𑌨𑍇 𑌰𑌮𑍍𑌯𑍇 𑌸𑌂𑌵𑌾𑌸𑌂 𑌤𑌦𑍍𑌗𑌤𑌃।
𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑌾 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑌨 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌤𑍍𑌵𑌾 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌸𑍁𑌤𑌾।
𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌯𑌮𑍁𑌨𑌯𑍇 𑌨𑌾𑌥𑍇 𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌂 𑌪𑌦𑍍𑌮𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌹𑍂।

(ச. த. 5: 33, 37, 40)

மூலமெய்யெழுத்தன்னதோர் முதுவலம்புரியின்
கோலமாகிநோற்றிருத்தியாலுலகருள்குறிப்பால்

(கந்தபுராணம், உமைகயிலைநீங்குபடலம், சஎ)

வேதமூலநேர்வால்வளையுருக்கொடுவிளங்கி
யேதமில்லதோர்பதுமபீடத்தின்மேலிருந்தாள்

(உமைகயிலைநீங்குபடலம், ருக)

தேனிமிர்கமலமொன்றிற்சிவனிடத்திருந்ததெய்வ
வானிமிர்பணிலம்வைகமற்றவனதுகண்ணுற்றான்

(காளிந்திப்படலம், கஎ)

6. பிரணவம் வலம்புரிச்சங்குவடிவினதென்று ஸ்காந்தபுராண சங்கர சங்கிதையைச் சார்ந்த தக்ஷகாண்டத்திற் கூறப்படலானும்,

7. "ஓங்காரவடிவானவுன்பாததாமரையும்" என விநாயகர் ஓங்கார வடிவினர் என்று துண்டிவிநாயகர் திருவருட்பாவிற் கூறப்படலானும்,

𑌓𑌂𑌕𑌾𑌰𑌮𑌮𑍃𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌶𑌿𑌵𑌮𑌕𑍍𑌷𑌰𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍।
𑌯𑌮𑌾𑌹𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌵𑌿𑌦𑍁𑌷𑌸𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 𑌵𑌿𑌨𑌾𑌯𑌕𑌮𑍍।

8. "அமிர்தம் என்றும், பிரம்ம் என்றும், சிவம் என்றும், அக்ஷரம் என்றும், அவ்வியயம் என்றும் எதனைக் கூறுகின்றனரோ, அந்த ஓங்காரத்தை விநாயகர் என நமஸ்கரிக்கின்றேன்" என விநாயகரை ஓங்கார வடிவாகக்கொண்டு ஸ்தவராஜத்திற் கூறப்படலானும்,

9. "ஓங்காரமே நற்றிருவாசி" எனத் திராவிட சித்தாந்த சாஸ்திரம் பதினன்கனுள் ஒன்றாகிய உண்மை விளக்கத்திற் கூறப்படலானுமாம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வைதிக சுத்தாத்துவித

சைவசித்தாந்த தத்துவப்பட

வினு விடை.

---

1. வைதிக சைவத்திற் கூறப்படும் தத்துவம் எத்தனை?

முப்பத்தாறு.

2. இத்தத்துவம் முப்பத்தாறும் எத்தனை வகைப்படும்?

ஆன்மதத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவமென மூவகைப்படும்.

3. இதற்குப் பிரமாணம் என்னை?

ஆத்மதத்வமதோபாகே வித்யாதத்வஞ்ச மத்யமே
ஊர்த்வே சிவதத்வஞ்ச த்ரீணி தத்வானி ஸந்தி ஹி ||

ஆன்மதத்துவம் அதோபாகத்தினும், வித்தியாதத்துவம் மத்தியபாகத்தினும், சிவதத்துவம் ஊர்த்துவபாகத்தினும் உள்ளனவாம் எனப் பிருகச்சாபாலோபநிடதத்தினும் அகஸ்தியசங்கிதையினும் கூறப்படுகின்றது.

4. இதற்குப் புராணேப்பிருங்கணம் என்னை?

சிவவித்யாத்மதத்வாக்யம் தத்வத்ரயமுதாஹ்ருதம் |

"சிவதத்துவம் வித்தியாதத்துவம் ஆன்மதத்துவம் என மூவகைத் தத்துவம் கூறப்பட்டது" (சை. வா. Pt. I. 17: 28; 23: 17.)

5. ஆன்மத்த்துவத்தடங்கிய தத்துவங்கள் யாவை?

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் (என்னும் மகாபூதம் ஐந்தும்); கந்தம், இரசம், ரூபம், பரிசம், சப்தம் (என்னும் சப்ததன்மாத்திரையாகிய சூக்குமபூதம் ஐந்தும்); உபஸ்தம், பாயுரு, பாணி, பாதம், வாக்கு (என்னும் கன்மேந்திரியம் ஐந்தும்); ஆக்கிராணம், சிங்குவை, சட்சு, துவக்கு, சோத்திரம் (என்னும் ஞானேந்திரியம் ஐந்தும்); மனம், புத்தி, சித்தம், அகங்காரம் (என்னும் அந்தக்கரணம் நான்குமாகச்) சேர்ந்த இருபத்துநான்கு தத்துவமும் ஆன்மதத்துவம் எனப்படும்.

சித்தத்தை நீக்கிப் பிரகிருதியையேனும், குணதத்துவத்தையேனுஞ் சேர்த்து ஆன்மதத்துவம் இருபத்துநான்கு என்பாரும் உளர்.

6. தத்துவம் இருபத்துநான்கிற்கும் சுருதிப்பிரமாணம் என்னை ?

𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌚 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌮𑌾𑌤𑍍𑌰𑌾 𑌚𑌾𑌪𑌶𑍍𑌚𑌾𑌪𑍋𑌮𑌾𑌤𑍍𑌰𑌾 𑌚 𑌤𑍇𑌜𑌶𑍍𑌚 𑌤𑍇𑌜𑍋𑌮𑌾𑌤𑍍𑌰𑌾 𑌚 𑌵𑌾𑌯𑍁𑌶𑍍𑌚 𑌵𑌾𑌯𑍁𑌮𑌾𑌤𑍍𑌰𑌾 𑌚𑌾𑌕𑌾𑌶𑌶𑍍𑌚𑌾𑌕𑌾𑌶𑌮𑌾𑌤𑍍𑌰𑌾 𑌚 𑌚𑌕𑍍𑌷𑍁𑌶𑍍𑌚 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌞𑍍𑌚 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌞𑍍𑌚 𑌶𑍍𑌰𑍋𑌤𑌵𑍍𑌯𑌞𑍍𑌚 𑌘𑍍𑌰𑌾𑌣𑌞𑍍𑌚 𑌘𑍍𑌰𑌾𑌤𑌵𑍍𑌯𑌞𑍍𑌚 𑌰𑌸𑌶𑍍𑌚 𑌰𑌸𑌯𑌿𑌤𑌵𑍍𑌯𑌞𑍍𑌚 𑌤𑍍𑌵𑌕𑍍𑌚 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌯𑌿𑌤𑌵𑍍𑌯𑌞𑍍𑌚 𑌵𑌾𑌕𑍍𑌚 𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌞𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑍌 𑌚𑌾𑌦𑌾𑌤𑌵𑍍𑌯𑌞𑍍𑌚𑍋𑌪𑌸𑍍𑌥𑌶𑍍𑌚𑌾𑌨𑌨𑍍𑌦𑌯𑌿𑌤𑌵𑍍𑌯𑌞𑍍𑌚 𑌪𑌾𑌯𑍁𑌶𑍍𑌚 𑌵𑌿𑌸𑌰𑍍𑌜𑌯𑌿𑌤𑌵𑍍𑌯𑌞𑍍𑌚 𑌪𑌾𑌦𑍌 𑌚 𑌗𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌞𑍍𑌚 𑌮𑌨𑌶𑍍𑌚 𑌮𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌞𑍍𑌚 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌶𑍍𑌚 𑌬𑍋𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌞𑍍𑌚𑌾𑌹𑌂𑌕𑌾𑌰𑌶𑍍𑌚𑌾𑌹𑌂𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌞𑍍𑌚 𑌚𑌿𑌤𑍍𑌤𑌞𑍍𑌚 𑌚𑍇𑌤𑌯𑌿𑌤𑌵𑍍𑌯𑌞𑍍𑌚 (பிர. 4. 8)

7. இத்தத்துவங்களுக்குப் புராணோபப்பிருங்கணம் என்னை ?

(I) 𑌭𑍂𑌮𑌿𑌰𑌾𑌪𑍋𑌽𑌨𑌲𑍋 𑌵𑌾𑌯𑍁𑌰𑌾𑌕𑌾𑌶𑌂 𑌮𑌨𑌸𑍈𑌵 𑌚 ।
𑌰𑌸𑍋 𑌰𑍂𑌪𑌂 𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑍌 [illegible] 𑌚 ।
𑌵𑌾𑌣𑌿 𑌪𑌾𑌦𑌘𑍍𑌰𑌾𑌣𑌜𑌿𑌹𑍍𑌵𑌾𑌤𑍍𑌵𑌕𑍍𑌚𑌕𑍍𑌷𑍁𑌃𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌮𑍇𑌵 𑌚 ।
𑌅𑌹𑌂𑌕𑌾𑌰𑌶𑍍𑌚 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌶𑍍𑌚 𑌮𑌨𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿.......... ॥

எனப் பிரமாண்டபுராணத்து முப்பத்திரண்டாம் அத்தியாயத்தினும்,

(II) 𑌪𑌞𑍍𑌚 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌤𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌃 𑌪𑌞𑍍𑌚𑌕𑌰𑍍𑌮𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌚 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌭𑍇𑌦𑍇𑌨 𑌪𑌞𑍍𑌚𑌪𑌞𑍍𑌚 𑌵𑌿𑌭𑌾𑌗𑌶𑌃 ।
𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑌿 𑌧𑌾𑌤𑌵𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑌤𑍍 𑌪𑌞𑍍𑌚 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌦𑌿𑌵𑌾𑌯𑌵𑌃 ।
𑌮𑌨𑍋 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿 𑌰𑌹𑌂𑌪𑍍𑌰𑌾𑌤𑌿𑌗𑍁𑌣𑌾𑌃..... ॥

(பிருதிவி முதலிய) பூதங்கள் ஐந்தும், (சப்த முதலிய) தன்மாத்திரை ஐந்தும், (வாக்காதி) கன்மேந்திரியம் ஐந்தும், (சுரோத்திராதி) ஞானேந்திரியம் ஐந்தும், மனம், புத்தி, அகங்காரம், குணம் என்னும் இருபத்து நான்கும் (சை. வா. Pt. I. 29: 13, 14) ஹும், தேவீபாகவதத்தினும்,

(III) 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌦𑌿𑌚 𑌶𑌬𑍍𑌦𑌾𑌦𑌿𑌵𑌾𑌗𑌾𑌦𑍍𑌯𑌂 𑌪𑌞𑍍𑌚𑌕𑌂 𑌪𑍁𑌨𑌃 ।
𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌯𑌞𑍍𑌚 (𑌶𑌿𑌰𑌃 𑌪𑌾𑌣𑍍𑌯𑍋𑌵𑍍𑌯𑍋𑌮𑌾𑌦𑍌 𑌚 𑌤𑌦𑍁𑌷𑍍𑌯𑌤𑍇)
𑌮𑌨𑍋 (𑌮𑌤𑌸𑍍𑌤𑍁) 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌶𑍍𑌚𑌾𑌹𑌂𑌕𑍃𑌤𑌿𑌃 (𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌰𑍇𑌵 𑌚)।
(𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌶𑍍𑌚) 𑌗𑍁𑌣𑌾𑌃.................................... ॥

என (சை. கை. 9: 25—28) ஹுங் கூறப்பட்டிருக்கின்றது.

8. வித்தியாதத்துவம் எவை ?

காலம், கலை, நியதி, ராகம், வித்தை, மாயை, புருடன் என்னும் ஏழுமாம்.

9. இதற்குச் சுருதிப்பிரமாணம் என்னை ?

காலஃ ஸ்வபாவொ நியதி யத்ருச்சா பூதாநி யொநிஃ புரு-
ஷ இதிசிந்த்யா।

என்றது சுவேதாசுவதரோபநிடதம் (சுவே. 1. 2)

10. இந்தச் சுவேதாசுவதரோபநிடத மந்திரத்தினுல் வித்தியாதத்துவம் ஏழென்று கோடற்கட் பிரமாணம் என்னை ?

(*I*) ……………………………புருஷஸ்ய து।
ஶுத்தாஶுத்தாத்யா தத்வஸங்கம் பரிகீர்த்திதம்।
நியதிஃ காலராகஶ்ச வித்யா ச கலயா ஸஹ।
கலா ச ஸம்ஜ்ஞிதம் மாயாதத்வம் முநீஶ்வர।
(மாயாதஃ ப்ரக்ருதிம் வித்யாந்மாயாஶக்திரிதீரிதா)
தஜ்ஜாந்யேதாநி தத்வாநி ஶுத்தாஶுத்தாநி நஸம்ஶயஃ।
காலஃஸ்வபாவொ நியதிரிதிச ஶ்ருதிரப்ரவீத்।
பஞ்ச கஞ்சுகமேவாஸ்ய பஞ்சகஞ்சுகமுச்யதே।
ஏதாநி பஞ்சதத்வாநி வித்வாநபி விமோஹயேத்।
நியத்யதஸ்தாச ப்ரக்ருதேருபரிஷ்டாத் புமாநயம்।
வித்யாதத்வமிதம் ப்ரோக்தம்……………………॥

புருடனுக்கு நியதி (1), காலம் (2), ராகம் (3), வித்தை (4), கலை (5), என்னும் தத்துவங்கள் ஐந்தும் அந்தரங்கமாகக் கூறப்பட்டன எனவும், இவை மாயை (6) யினின்றுண்டாயினவெனவும், இதற்குப் பிரமாணம் (9-ஆம் விஞவிடையிற்காட்டிய) "காலஸ்சுவபாவோநியதி" என்னும் (சுவேதாசுவதர) சுருதியாமெனவும், புருடனுக்கு இந்த ஐந்தும் பஞ்சகஞ்சுகம் எனப்படும் எனவும், இதனை உணராதோன் வித்துவானுயினும் மூடனே எனவும், பிரகிருதிக்கு மேலும் நியதிக்குக் கீழுமுள்ளான் புருடன் (7) எனவும், இவ்வேழும் வித்தியாதத்துவம் எனவும் (சை. கை. 9: 29—34) கூறப்பட்டமையானும்,

(*II*) மேலும்,

………………(ப்ரக்ருதி) புருஷௌ।
நியதிஃ காலராகௌ ச கலாவித்யே ச மாயயா॥

எனப் பிரமாண்டபுராணத்தினும்,

(*III*) ……………………மாயாகாலஸ்வபாவஸ்ரஜஃ।
நியதிஶ்ச கலா வித்யா கலாதோ ராகபுருஷௌ।

என (சை. வா. Pt. II. 5: 22.) னுங் கூறப்பட்டமையானும் அறிக.

11. சிவதத்துவங்கள் யாவை?

சிவம், சத்தி, சாதாக்கியம், ஈசுவரம், சுத்தவித்தை என்னும் ஐந்தாம்.

12. இதற்குச் சுருதிப் பிரமாணம் என்னை?

ஶிவம் ஶக்திஶ்ச ஸாதாக்யம் ஈஶம் வித்யாக்யமேவ ச।

என்னும் பிருகச்சாபாலோபநிடதமந்திரமே பிரமாணம். (பிருக. 4. 19.)

13. இதற்குப் புராணப் பிரமாணம் என்னை?

(*I*) ஶுத்தவித்யேஶ்வரஸதாஶிவஶக்திஶிவா இதி।

சுத்தவித்தை, ஈசுவரம், சாதாக்கியம், சத்தி, சிவம் எனப் பிரமாண்ட புராணத்தினும்,

(*II*) நாதாத்பிந்துஸ்ததோ பிந்தோஸ்தத: ஸதாஶிவ:।
தஸ்மாந்மஹேஶ்வரோ ஜாத: ஶுத்தவித்யா மஹேஶ்வராத்॥

என (சை. வா. **Pt. II.** 5: 20) னும்,

(*III*) ....ஶுத்தவித்யா மஹேஶ்வரௌ।
ஸதாஶிவஶ்ச ஶக்திஶ்ச ஶிவஶ்சேதி ச பஞ்சகம்।
ஶிவதத்த்வமிதம் ப்ராஹு: ப்ரஜ்ஞாந ப்ரஹ்மவாக்யத:॥

என (சை. கை. 9: 34, 35) னும் கூறப்பட்டமை காண்க.

14. மூவகைத் தத்துவங்களின் தொகுப்பு யாது?

சிவம், சத்தி, சாதாக்கியம், ஈசுவரம், சுத்தவித்தை; அசுத்தமாயை, காலம், கலை, நியதி, வித்தை, ராகம், புருடன்; (பிரகிருதி), சித்தம், புத்தி, அகங்காரம், மனம்; சோத்திரம், துவக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம்; வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம்; சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம்; ஆகாசம், வாயு, தேயு, அப்பு, பிருதிவி என்னும் முப்பத்தாறுமாம்.

15. சாங்கியநூலிற் கூறப்பட்ட தத்துவங்கள் யாவை?

ஸத்த்வரஜஸ்தமஸாம் ஸாம்யாவஸ்தா ப்ரக்ருதி: ப்ரக்ருதேர்மஹாந் மஹதோ(அ)ஹங்காரோ(அ)ஹங்காராத் பஞ்ச தந்மாத்ராணி உபயமிந்த்ரியம் தந்மாத்ரேப்ய: ஸ்தூலபூதாநி புருஷ இதி பஞ்சவிம்ஶதிர்கண:

சத்துவ ரஜஸ் தமஸ் என்னும் மூன்றன் சாமியாவஸ்தையையுடைய (மூலப்) பகுதியும், இதினின்று மகானும், இதினின்று அகங்காரமும், இதினின்று ஐந்து தன்மாத்திரைகளும், ஞானேந்திரிய கன்மேந்திரியங்களும்,

தன்மாத்திரையினின்று தூலபூதங்களும், புருஷனுமாகத் தத்துவம் இருபத்தைந்தாம் (சாங். 1. 61).

16. இச்சாங்கிய தத்துவங்கள் இருபத்தைந்தும் சைவசாஸ்திரங்களிற் கூறப்பட்ட எத்தத்துவங்களுள் அடங்குவன?

அவை ஆன்மதத்துவம் இருபத்துநான்கின்பாலனவாயடங்கும்.

17. இருபத்துநான்கிற்கு மேலுள்ள வித்தியாதத்துவ சிவதத்துவங்கள் சாங்கிய நூலிற் கூறப்பட்டனவா?

இல்லை.

18. வைஷ்ணவத்திற் கூறப்பட்ட தத்துவங்கள் யாவை?

"பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், இந்திரியங்கள், தன்மாத்திரைகள், பூதாதிகள், மகான், அவ்வியக்தம், அக்ஷரம், தமசு" என்பனவாம் என்று சுபாலோபநிடதத்திற் காணப்படுகின்றது.

19. இப்பிருதிவி முதலிய தத்துவங்களும் சைவத்திற் கூறிய எத்தத்துவத்துள் அடங்கின?

இவ்விருபத்துநான்கும் ஆன்மதத்துவம் இருபத்துநான்கில் அடங்கின.

20. ஏகான்மவாதோபநிடதங்களினும் மற்றை ஏகான்மவாத நூல்களினும் கூறப்பட்ட தத்துவங்கள் யாவை?

(I) ஜ்ஞாநேந்த்ரியாணி பஞ்சைவ ஶ்ரோத்ரத்வக்சக்ஷுர்ஜிஹ்வநாஸிகா:|
கர்மேந்த்ரியாணி பஞ்சைவ வாக்பாண்யங்க்ர்யாதய: க்ரமாத்|
ப்ராணாதயஸ்து பஞ்சைவ பஞ்ச ஶப்தாதயஸ்ததா|
மநோ புத்திரஹங்காரஶ்சித்தஞ்சேதி சதுஷ்டயம்|
சதுர்விம்ஶதிதத்வாநி தாநி ப்ரஹ்மவிதோ விது:||

"சுரோத்திரம் துவக்குமுதலிய ஞானேந்திரியம் ஐந்தும், வாக்குப் பாணி முதலிய கன்மேந்திரியம் ஐந்தும், பிராணாதி வாயுக்கள் ஐந்தும், சப்தாதி ஐந்தும், மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் அந்தக்கரணம் நான்குமாகிய இருபத்துநான்கு தத்துவங்கள்" என ஏகான்மவாத வராகோபநிடதத்தினும்,

(II) ஶ்ரோத்ராதீநி ஹிதாநி பஞ்சைதேஷாம் ப்ரகீர்த்திதா:|
ஶப்தாஸ்ஸ்பர்ஶாதய: பஞ்ச பஞ்ச கர்மேந்த்ரியாணி ச|
ஜ்ஞாநேந்த்ரியாணி பஞ்சைவ ப்ராணாத்யா: பஞ்ச வாயவ:|
மநோ புத்திரஹங்காரஶ்சித்தஞ்சேதி சதுஷ்டயம்|

தேஷாம் காரணபூதைகா அவித்யா ஷட்த்ரிம்ஶகஃ புமான்।
விஶ்வஸ்ய ஜநகஃ கர்த்தா பஶோரந்யஃ பரஶ்ஶிவஃ॥

"ஆகாசமுதலிய பூதம் ஐந்தும், சப்தமுதலிய தன்மாத்திரை ஐந்தும், வாக்குமுதலிய கன்மேந்திரியம் ஐந்தும், சுரோத்திரமுதலிய ஞானேந்திரியம் ஐந்தும், பிராணன் முதலிய வாயுப் பத்தும், மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் அந்தக்கரணம் நான்கும், இவற்றிற்குக் காரணமாகிய (மூலப்பிரகிருதி எனப்படும்) அவித்தையும், சீவனுமாகிய முப்பத்தாறு தத்துவங்கள்" என (சு. சு. 2: 3—5) னும் கூறப்பட்டது.

21. மாயாவாதத்தினும் சைவசாஸ்திரத்தினும் முப்பத்தாறு தத்துவங் கூறப்படுதலின், இரண்டின் முடிவும் ஒன்றுமா?

சைவத்திலே ஏகான்மவாதிகள் கூறிய முப்பத்தாறு தத்துவங்களிற் பிராணாதி வாயுக்கள் பத்தும் பூதங்களுள் ஒன்றாகிய வாயுவில் அடங்குதலானும், அவித்தை என்பது மூலப்பிரகிருதியேயாகலானும், சீவன் ராசசகுணத்தின் பாலதாகலானும், அவர் கூறிய முப்பத்தாறு தத்துவங்களும் ஆன்மதத்துவத்தில் அடங்குதலான் அவற்றின் முடிவு ஒன்றாகாது.

22. உபநிடதங்களான் மேலே சித்திக்கப்பெற்ற வித்தியாதத்துவ சிவதத்துவங்கள் மூலப்பிரகிருதியாதி தத்துவங்களுள் எவ்வாற்றானும் அடங்கும் இயல்பினவா?

பிருதிவி தத்துவமுதற் புத்தி தத்துவமீறாய இருபத்துநான்கு தத்துவங்கட்கும் வியாபகமாகிய மூலப்பிரகிருதிக்குள், இதற்கு மேல் வியாபகமாய் நின்ற வித்தியாதத்துவ சிவதத்துவங்கள் எவ்வாற்றானும் அடங்குமாறின்று.

23. மாயாவாதத்திலே தத்துவங்கள் குறைவுறவும், (வேத) ஆகம (புராண)ங்களில் விரிவுறவும் கூறப்பட்டன என்பதற்குப் பிரமாணம் என்னை?

ஸாம்க்யயோகப்ரஸித்தாநி தத்வாந்யபி ச காநிசித்।
ஶிவஶாஸ்த்ரப்ரஸித்தாநி தேப்யோந்யாந்யகிலாநி ஸ॥

"சில தத்துவங்கள் மாத்திரம் *சாங்கியயோகத்திற் பிரசித்தமாயுள்ளன; அவற்றின் வேறாகிய தத்துவங்களெல்லாம் சிவாகமங்களிலே பிரசித்தமாயுள்ளன" என்னும் சிவபுராணவாக்கியம் பிரமாணம். (சை. வா. Pt. I. 25: 15)

[*] சாங்கியயோகம் என்றது ஏகான்மவாதமாகிய மாயாவாதத்தின் மேற்று. இவ்வுண்மை எமது பிரமசூத்திர சிவாத்துவித சைவபாடியத் தமிழ் மொழி பெயர்ப்பின் 86-ஆம் பக்கத்து (365, 366) ஆம் இலக்கங்களினும், கூர்மபுராண ஈசுரகீதை இரண்டாம் அத்தியாயத்தினும், இப்புஸ்தகத்திலே பூவித்பாவனை கூறும் வினாவிடைகளினும் காண்க.

24. மாயாவாதம் என்றதின் பொருள் என்னை ?

(ஜகத் சீவனும்) மாயையிலே வாதம் (விசாரம்) என்பது பொருள்.

25. இதற்கு பிரமாணம் என்னை ?

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑌦𑌾 𑌵𑌿𑌚𑌾𑌰𑌯𑍇𑌜𑍍𑌜𑌗𑌜𑍍 𑌜𑍀𑌵𑌪𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑍋 𑌜𑍀𑌵𑌭𑌾𑌵𑌜𑌗𑌦𑍍𑌭𑌾𑌵 𑌬𑌾𑌧𑍇 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌭𑌿𑌨𑍍𑌨𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵𑌾𑌵𑌶𑌿𑌷𑍍𑌯𑌤𑍇।

என்னும் ஏகான்மவாத பைங்கலோபநிடதவாக்கியமே பிரமாணம்.

26. இவ் வாக்கியத்தின் பொருள் யாது ?

"ஜகத்து சீவன் பரமான்மா என்பவற்றைச் சதாகாலமும் விசாரிக்க, வாதிக்க என்று (ஆசாரியர் சீடனுக்கறிவுறுப்ப, சீடன் வந்தியாபுத்திரனைப் போன்றிருக்கும் ஜகத்தையும் சீவனையும் விசாரிக்க வேண்டியது, வாதிக்க வேண்டியது எற்றுக்கு? பரமான்மாவையன்றோ விசாரிக்கவேண்டும் என, அதற்கு ஆசாரியர் மாயையாகிய) ஜகத்தையும் சீவனையும் விசாரித்தலான், வாதித்தலான் ஆன்மாவே சேஷிக்கின்றது" என்று உத்தரம் இறுத்ததாக, சங்கராசாரியர் சீடராகிய வித்தியாரணியர் தாம் இயற்றிய பஞ்சதசியின் சித்திரதீபப்பிரகரணத்தில் மேலே உரைத்த பைங்கலவாக்கியப்பொருளை

𑌸𑌦𑌾 𑌵𑌿𑌚𑌾𑌰𑌯𑍇𑌤𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌜𑍍𑌜𑌗𑌜𑍍𑌜𑍀𑌵𑌪𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑌃।
𑌜𑍀𑌵𑌭𑌾𑌵𑌜𑌗𑌦𑍍𑌭𑌾𑌵𑌬𑌾𑌧𑍇 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑍈𑌵 𑌶𑌿𑌷𑍍𑌯𑌤𑍇।

எனச் சுலோகமாக இயற்றிவிளக்கினமையான், அப்பொருள் உணரப்படும்.

27. இம் மாயாவாதம் என்னும் பதம் எங்கே காணப்படுகின்றது ?

பதுமபுராண உத்தரகாண்டத்து, 263-ஆம் அத்தியாயத்து 70-ஆஞ் சுலோகத்திற் காணப்படுகின்றது. (பூனாநகரத்து ஆனந்தாசிரமயந்திரசாலையில் அச்சியற்றப்பெற்ற பதுமபுராணத்து 1834-ஆம் பக்கத்திற் பார்க்க)

28. ஏகான்மவாதிகளும் பாஞ்சராத்திரிகளும் எதனை அவலம்பித்து நிற்கின்றார்?

இவ்விரு மதஸ்தர்களும் பிருதிவிமுதற் சிவதத்துவாந்தம் வரையினுமுள்ள முப்பத்தாறு தத்துவங்களுள்ளே அதமபாகத்துப் பிரகிருதிப் பாற்பட்ட ஆன்மாவை முறையே நிர்க்குணமும் சகுணமுமாகக் கொண்டு அவலம்பித்து நிற்கின்றனர்.

29. 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌂 𑌸𑌦𑌾 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑍂𑌰𑌯𑌃।

(இரு. வே. 1. 22. 20)

'அந்த விஷ்ணுவினது பரமபதத்தைப் பெரியோர் சதாகாலமும் பார்க்கின்றார்" என்னும் இருக்குவேத மந்திரத்திற் கண்ட விஷ்ணு என்னும் பதம் எவர் மேலாயது எனப் பிரமாணத்தோடு நிரூபணஞ் செய்க.

ஶிவோ மஹேஶ்வரஶ்சைவ ருத்ரோ விஷ்ணு: பிதாமஹ:।
ஸம்ஸாரவைத்ய: ஸர்வஜ்ஞ: பரமாத்மேதி முக்யத:॥

"சிவன், மகேசுவரன், உருத்திரன், விஷ்ணு, பிதாமகர், சம்சாரவைத்தியர், சர்வஞ்ஞர், பரமாத்துமா" என்னும் சிவபிரானது நாமாஷ்டகங்களுள் விஷ்ணு என்னும் சப்தம் படிக்கப்படுதலான், மேலே உரைத்த விஷ்ணு நாமம் சிவபிரான் மேலதேயாம். (சை. வா. **Pt. I.** 28: 22, 23)

30. அவ் விஷ்ணு நாமத்தின் பொருள் என்னை?

ஶிவதத்த்வாதி பூம்யந்தம் ஶரீராதிகடாதி ச।
வ்யாப்யாயி திஷ்டதி ஶிவஸ்தேந விஷ்ணுருதாஹ்ருத:॥

"சிவதத்துவமுதற் பிருதிவிதத்துவம் ஈறுகச் சரீராதிகளையும் கடாதிகளையும் வியாபித்து நிற்கின்றமையாற் சிவபிரான் விஷ்ணு எனப்படுவர்" (சை. வா. **Pt. I.** 28: 36, 37)

31. இந்த விஷ்ணு சப்தத்திற்கு வாசுதேவர் எனப் பொருள் கொண்டால் என்னை?

வாசுதேவரது வியாபகம் சிவதத்துவ வித்தியாதத்துவங்களில் இலாது மூலப்பிரகிருதி வரையில் உண்மையான், அவர்க்கு விஷ்ணு என்னும் பெயர் வாஸ்தவமாய்ச் செல்லாது உபசாரமாத்திரையாற் செல்லும்.

32. மேலே உதகரித்த இருக்குவேத மந்திரத்தின் பொருள் எச்சுருதியினல் வலியுறுத்தப்படும்?

ஸோத்வந: பாரமாப்நோதி தத்விஷ்ணோ: பரமம் பதம்
(க. 3: 9)

"அவன் அத்துவாவின் கரைக்கண்ணதாகிய சிவனுரது (பரமாகாய) பரம பதத்தை அடைகின்றான்" என்னும் கடவல்லி சுருதியான் வலியுறுத்தப்படும். எங்ஙனமெனில், அத்துவா என்பது முன்னர்ப் போதருமாறு மந்திராத்துவாமுதல் அறுவகைப்பட, இவற்றுள் ஒன்றாகிய தத்துவாத்துவாவில் விஷ்ணு என்னும் பதத்தின் அர்த்தம் முடிவுறுதலானென்க.

33. அத்துவா எத்தனை வகைப்படும்?

மந்த்ராத்வா ச பதாத்வா ச வர்ணாத்வா ச ப்ரகீர்த்தித:।
புவநாத்வா ச தத்த்வாத்வா கலாத்வா சாஷ்டுக்த: க்ரமாத்॥

"மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணத்துவா, புவனத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவா என்னும் ஆறும் அத்துவா எனப்படும்." (சை. வா. **Pt. I.** 25: 10)

கலாதத்வ ஹுவந வண்ண பத மந்த்ர ரூபகம்।
ஷடத்வா ஸர்வஸம்ஹ்ருஷ்டஃ ஸமிருத்தேது

"கலை, தத்துவம், புவனம், வர்ணம், பதம், மந்திரம் என்பன தொகுப்பாய் ஆறத்துவா எனப்படும்." (சை. வா. **Pt. II.** 15: 2)

34. *கலாத்துவா யாது?*

நிவ்ருத்த்யாதயஃ கலாஃ பஞ்ச கலாத்வாசுப்ரவேத பாசயேஃ।

நிவிர்த்திகலை முதலிய (பிரதிஷ்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியாதீதகலை) ஐந்தும் கலாத்துவா எனப்படும் (சை. வா. **Pt. II.** 15: 3)

35. *தத்துவாத்துவா யாது?*

ஶிவதத்வாதி ஹ்ருத்வ்யந்தம் தத்வாத்வா ஸமுதாஹ்ருதஃ।

சிவதத்துவமுதற் பிருதிவிதத்துவம் இறுதியாயுள்ள தத்துவம் முப்பத்தாறும் தத்துவாத்துவா எனப்படும் (சை. வா. **Pt. II.** 15: 4)

36. *புவனாத்துவா யாது?*

ஆதாராத்யுந்மநாந்தஸ்து புவநாத்வா ப்ரகீர்த்திதஃ।

ஆதார (காலாக்கினிருத்திர புவனமுதல்) உன்மனு (அநாசிருத புவனு) ந்தம் வரையும் உள்ள 224 புவனமும் புவனாத்துவா எனப்படும். (சை. வா. **Pt. II.** 15: 5)

37. *வர்ணாத்துவா யாது?*

வர்ணாநாம் ருத்ர ரூபாணாம் பஞ்சாஶத் வர்ணாத்வஸம்ஜ்ஞிதாஃ।

"(அகாராதி க்ஷகாராந்தமாயுள்ள) சிவரூப *ஐம்பத்தொரு அக்ஷரங்கள் வர்ணாத்துவா எனப்படும்" (சை. வா. **Pt. II.** 15: 6)

38. *பதாத்துவா யாது?*

அநேகபேத ஸம்பந்நஃ பதாத்வா ஸமுதாஹ்ருதஃ।

அநேகபேதங்களையுடைய (வியோமவியாபினிமுதலிய எண்பத்தொரு) பதம் பதாத்துவா எனப்படும். (சை. வா. **Pt. II.** 15: 6)

39. *மந்திராத்துவா யாது?*

ஸப்தகோடி மஹாமந்த்ரா மந்த்ராத்வா ஸமுதாஹ்ருதஃ।

எழு பல்லவங்களையுமிறுதியிலுடைய (பதினெரு) மந்திரங்களும் மந்திராத்துவா எனப்படும். (சை. வா. **Pt. II.** 15: 8)

---

* ஐம்பத்தொன்றென்றபாலது ஐம்பதெனச் சுலோகத்திலே பொதுவுறக் கூறப்பட்டது.

40. இந்த ஆறத்துவாவும் ஒன்றுக்கொன்று வியாபக வியாப்பியமாதலுளவோ?

மந்த்ராஸ்ஸர்வே பதை³ர்வ்யாப்தா வாச்யவாசகபா⁴வத: ஸ்தி²தாநி ச |
பதா³நி (வர்ணைஸ்ஸர்வைஸ் ஸம்ஹிதைஸ்ஸஹ விஶேஷித:) |
வர்ணாஸ்து பு⁴வநைர்வ்யாப்தாஸ் தேஷாம் தேஷு ஸம்ஸ்தி²தா: |
பு⁴வநாந்யபி தத்த்வௌகை⁴ருத்பாத்³யாதா⁴ரகை: க்ரமாத் |
வ்யாப்தாநி (காரணத்வேந ஸ்வாதா⁴ரத்வாதி³நா) |
கலாபி⁴ஸ்தாநி தத்த்வாநி வ்யாப்தாந்யேவ யதா²க்ரமம் ||

ஆம். மந்திரங்கள் பதங்களானும், பதங்கள் வர்ணங்களானும், வர்ணங்கள் புவனங்களானும், புவனங்கள் தத்துவங்களானும், தத்துவங்கள் கலைகளானும் வியாபிக்கப்பட்டன என்று கூறப்பட்டது.

(சை. வா. Pt. I. 25: 11, 16)

41. நிவிர்த்திகலையினுல் வியாபிக்கப்பட்ட தத்துவம் யாது?

பிருதிவிதத்துவம்.

42. பிரதிஷ்டாகலையினுல் வியாபிக்கப்பட்டவை யாவை?

அப்புமுதற் பிரகிருதி ஈறுயுள்ள தத்துவங்களாம்.

43. வித்தியாகலையினுல் வியாபிக்கப்பட்டவை யாவை?

புருஷன்முதல் மாயையீறுகிய தத்துவம் ஏழுமாம்.

44. சாந்திகலையினுல் வியாபிக்கப்பட்டவை யாவை?

சுத்தவித்தை முதலிய மூன்றுமாம்.

45. சாந்தியாதீதகலையினுல் வியாபிக்கப்பட்டவை யாவை?

சத்திதத்துவம் சிவதத்துவம் என்னும் இரண்டுமாம்.

46. நிவிர்த்தி கலை யாது சக்கரம் எனப்படும்? இதை அதிஷ்டிப்பவர் யாவர்?

நிவ்ருத்திரேவ ஸா வ்யாப்தா ஸ்ருஷ்டிசக்ரம் பு³தை⁴: |
விதா⁴த்ராதி⁴ஷ்டி²தம் தத்து ஸ்ருஷ்டிகர்த்ரா ஹிதம் |
ஹிரண்யக³ர்ப⁴ஸ்தஸ்யைவ வ்யூஹாஶ்சைவ சதுஷ்டயம் |
ஹிரண்யக³ர்போ⁴ விராட் ச புருஷ: காலஏவ ச |
ஏததே³வ பத³ம் ப்ராப்யம் ப்³ரஹ்மாதி³த்⁴யாயிநாம் ந்ருணாம் ||

நிவிர்த்திகலாரூபம் சிருஷ்டிசக்கரம்; இதை அதிஷ்டிப்பவர் பிரமா; இந்தப் பிரமாவுக்கு இரண்ணியகருப்பர், விராட்டு, புருஷர், காலர் என நான்கு வியூகர் உளர்; இவரைத் தியானிப்போர் எய்தும் பதம் இந்நிவிர்த்திகலா சக்கரமாம். (சை. கை. 10: 73, 69, 74)

47. பிரதிஷ்டாகலை யாது சக்கரம் எனப்படும்? இதை அதிஷ்டிப்பவர் யாவர்?

𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌚𑌕𑍍𑌰𑌮𑌿𑌦𑌂 𑌪𑍍𑌰𑌾𑌹𑍁𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌪𑌦 𑌉𑌤𑍍𑌤𑌮𑍇 ।
𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨𑌾𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌂 𑌚 𑌪𑌦𑌂 𑌤𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌰𑌮𑌾𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌤𑌥𑌾 𑌵𑌾𑌮𑍇 𑌸𑌰𑍍𑌵𑌰𑌕𑍍𑌷𑌾𑌕𑌰𑍋 𑌹𑌰𑌿𑌃 ।
𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌾𑌦𑌿 𑌚𑌤𑍁𑌷𑍍𑌕𑌂 𑌵𑍍𑌯𑍂𑌹𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌮𑍍 ।
𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑍋 𑌽𑌨𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌶𑍍𑌚 𑌤𑌥𑌾 𑌸𑌂𑌕𑌰𑍍𑌷𑌣𑌃 𑌪𑌰𑌃 ।
𑌪𑍍𑌰𑌦𑍍𑌯𑍁𑌮𑍍𑌨𑍇𑌤𑌿 𑌵𑌿𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌚𑌕𑍍𑌰𑌮𑌿𑌦𑌂 𑌪𑌰𑌮𑍍 ।
𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌸𑍃𑌷𑍍𑌟𑌸𑍍𑌯 𑌜𑌗𑌤𑌃 𑌕𑌰𑍍𑌤𑍄𑌣𑌾𑌞𑍍𑌚 𑌪𑌾𑌲𑌨𑌮𑍍 ।
𑌏𑌤𑌦𑍇𑌵 𑌪𑌦𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍍𑌵𑌾𑌰𑌾𑌧𑌨𑌸𑍇𑌵𑌿𑌨𑌾𑌮𑍍 ॥

"பிரதிஷ்டாகலாரூபம் ஸ்திதிசக்கரம்; இப்பதத்தை அதிஷ்டிப்பவர் விஷ்ணு; இவர் ரமாசத்தி வாமபாகத்தில் மேவ, அனைத்தையும் காக்கவல்லுநரும் மகானுமாய் விளங்குவர்; இவர்க்கு வாசுதேவர், அநிருத்தர், பிரத்தியும்நர், சங்கர்ஷணர் என நான்கு வியூகர் உளர்; இவர் படைத்தற் கர்த்தாவாகிய பிரமன் முதலாயினோர்க்கும் இரக்ஷகராவர்; விஷ்ணு சேவைசெய்வோர் அடையும் பரமபதம் இதுவாம்." (சை. கை. 10: 61—66)

48. வித்தியாகலை யாது சக்கரம் எனப்படும்? இதை அதிஷ்டிப்பவர் யாவர்?

𑌸𑌂𑌹𑌾𑌰𑌮𑌿𑌦𑌂 𑌚𑌕𑍍𑌰𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌪𑌦𑍇 𑌚 𑌕𑌥𑍍𑌯𑌤𑍇 ।
𑌅𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌶𑍍𑌚 𑌰𑍁𑌦𑍍𑌰𑍈𑌃 𑌪𑌦𑌮𑍇𑌤𑌚𑍍𑌛𑍁𑌭𑌾𑌲𑌯𑌮𑍍 ।
𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌵𑍍𑌯𑍂𑌹𑌮𑍇𑌵𑌂 𑌸𑍍𑌯𑌾𑌚𑍍𑌛𑌿𑌵𑌾𑌦𑍍𑌯𑌂 𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌮𑍍 ।
𑌶𑌿𑌵𑍋 𑌹𑌰𑍋 𑌮𑍃𑌡𑌶𑍍𑌚𑍈𑌵 𑌭𑌵 𑌇𑌤𑌿 𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌮𑍍 ।
𑌏𑌤𑌦𑍇𑌵 𑌪𑌦𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌂 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌰𑌾𑌧𑌨𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌮𑍍 ॥

"வித்தியாகலாரூபம் சங்காரசக்கரம்; இது உருத்திரரால் அதிஷ்டிக்கப்படும்; இந்த உருத்திரர்க்குச் சிவன் ஹரர் மிருடர் பவர் என நான்கு வியூகர் உளர்; இந்நிராமயமாகிய பதமே உருத்திரரைப் பூசிப்போர் அடையும் பதமாம்." (சை. கை. 10: 58, 52, 53, 59)

49. சாந்திகலை யாது சக்கரம் எனப்படும்? இதை அதிஷ்டிப்பவர்யாவர்?

𑌤𑌿𑌰𑍋𑌭𑌾𑌵𑌾𑌖𑍍𑌯𑌕𑌂 𑌚𑌕𑍍𑌰𑌂 𑌶𑌿𑌵𑍇 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌲𑌾𑌶𑍍𑌰𑌯𑌮𑍍 ।
𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌞𑍍𑌚 𑌪𑌦𑌮𑍇𑌤𑌦𑌨𑌨𑍍𑌤𑌕𑌮𑍍 ।
𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌵𑍍𑌯𑍂𑌹𑌮𑍇𑌵𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌦𑌿 𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌮𑍍 ।
𑌈𑌶𑍋 𑌵𑌿𑌶𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍 𑌪𑌰𑌮𑍇𑌶𑌃 𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌦𑌿𑌭𑍀𑌰𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌤𑌿𑌰𑍋𑌭𑌾𑌵𑌾𑌖𑍍𑌯𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।
𑌏𑌤𑌦𑍇𑌵 𑌪𑌦𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌂 𑌮𑌹𑍇𑌶𑌾𑌰𑌾𑌧𑌨𑌸𑍇𑌵𑌿𑌨𑌾𑌮𑍍 ॥

"சாந்திகலாரூபம் திரோபவச்சக்கரம்; இது மகேசுவரரால் அதிஷ்டிக்கப்படும்; இம்மகேசுவரர்க்கு ஈசர், விசுவேசர், பரமேசர், சர்வேசுவரர் என நான்கு வியூகர் உளர்; இந்த உத்தமமாகிய பதமே மகேசுவரரை உபாசிப்போர் அடையும் பதமாம்." (சை. கை. 10: 49, 45, 46, 50)

50. சாந்தியாதீதகலை யாது சக்கரம் எனப்படும்? இதை அதிஷ்டிப்பவர் யாவர்?

𑌅𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌮𑌯𑌂 𑌚𑌕𑍍𑌰𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌤𑍀𑌤𑌕𑌲𑌾𑌮𑌯𑌮𑍍।
𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑌾𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌞𑍍𑌚 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇।
𑌅𑌸𑍍𑌯 𑌵𑍍𑌯𑌷𑍍𑌟𑌿𑌤𑌾𑌪𑌨𑍍𑌨𑌂 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌦𑌿𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌮𑍍।
𑌏𑌤𑌤𑍍𑌸𑍇𑌵𑌾𑌪𑌰𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌂 𑌯𑌤𑍀𑌨𑌾𑌂 𑌭𑌾𑌵𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌮𑍍।
𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑍋𑌪𑌾𑌸𑌕𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌣𑌵𑌾𑌸𑌕𑍍𑌤𑌚𑍇𑌤𑌸𑌾𑌮𑍍।
𑌏𑌤𑌤𑍍𑌸𑍇𑌵𑌾𑌪𑌰𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌤𑍇𑌨 𑌸𑌾𑌕𑌂 𑌮𑍁𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌃।
𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌨𑍍 𑌭𑍋𑌗𑌾𑌨𑍍 𑌶𑌿𑌵𑍇𑌨 𑌪𑍍𑌰𑌹𑌰𑍍𑌷𑌿𑌣𑌾।

"சாந்தியாதீதகலாரூபம் அநுக்கிரகசக்கரம்; இது சதாசிவரால் அதிஷ்டிக்கப்பட்ட பரமபதம்; இவர்க்குத் (திரோபவாதி நான்கு சக்கரங்களிலுள்ள) மகேசுவரர், உருத்திரர், விஷ்ணு, பிரமா என்னும் நால்வர் வியஷ்டிரூபர்; பிரணவத்திருத்திய அறிவுடையராய்ப் பாவிக்குஞ் சதாசிவோபாசகர்களாகிய துறவிகள் அடையும் பதம் இதுவே; இவ்வுபாசகர்கள் பிரமசொரூபியாகிய சிவனாரோடு மிருந்த விரிவாகிய போகங்களைத் துய்க்கின்றார்." (சை. கை. 10: 27—30)

51. மேலே உரைத்த ஐவகைச் சக்கரங்களுக்கும் ஆதாரம் என்னை?

𑌪𑌞𑍍𑌚𑌾𑌰𑌂 𑌚𑌕𑍍𑌰𑌮𑍍 𑌪𑌰𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇𑌵𑍍𑌯𑌯𑌮𑍍।

இவ்வைந்து சக்கரங்களுக்கும் சிருட்டியாதி "ஐந்து ஆரங்களையுடைய சக்கரம் மேலே விரிவாயுள்ளது" என்னும் தைத்திரீய ஆரணியகத்து மூன்றுவது பிரசினத்துப் பதினொராம் அநுவாகத்திற் கண்ட மந்திரம்.

52. இதற்கு உபப்பிருங்கணப் பிரமாணம் என்னை?

சைவபுராண கைலாசசம்மிதை பத்தாம் அத்தியாயத்து இருபத்து நான்காம் சுலோகமுதல் எழுபத்தாறும் சுலோகம் இறுதியாய்ப் போந்த ஐம்பத்திரண்டு சுலோகங்களே பிரமாணம்.

53. சிவாத்துவித சைவபாடியத் தமிழ் மொழி பெயர்ப்பின் 2-ஆம் பக்கத்திலே பிரம உருத்திரர்களை ஓர்போது தோற்றுவித்தவர் விஷ்ணு என்றும், 6-ஆம் பக்கத்து, 16-ல் அந்த உருத்திரர் திரியருத்திரர் அன்றென்றும் கூறப்பட்டவிடத்

தும், அங்ஙனமே நாலாயிரப்பிரபந்தத்தினும். பிரம உருத்திரர்களுக்கு மேலாய் விஷ்ணு துதிக்கப்பட்டவிடத்தும்

நம: ஸ்ரீஸேதுமத்யே தஸ்மை ஸ்ருஷ்டிஸ்தித்யந்தகாரிணே।

(சேதுமான்மியம், 3: 32)

"யாவுந் தந்து வைத்தழிக்கும் வானோர் தலைவனே (நாராயணரே) போற்றி யென்றான்" எனப் படைத்தல் காத்தல் அழித்தல் செய்யும் பிரமா விஷ்ணு உருத்திரர்களுக்குத் தலைவர் காத்தற்கடவுளாகிய விஷ்ணு வென்று கோடல் பொருந்துமா?

> வாஸுதேவாஹ்வயா நாம ஸா குணாதீதா ஸுநிஷ்கலா।
> ராஜஸீ சாநிருத்தாக்யா ப்ராஹ்ம ஸ்ருஷ்டிகாரிகா ।
> ஸத்வோத்ரிக்தா த்ருதீயா ஸ்யாத் ப்ரத்யும்நேதி ச ஸம்ஜ்ஞிதா।
> த்விதீயா ருத்ரஸம்ஜ்ஞா ஸ்யாத் தாமஸீ ஶேஷஸம்ஜ்ஞிதா।

(46-ஆம் வினவிடையிற் கூறியாங்கு) படைத்தற் கர்த்தாவாகிய பிரமாவுக்கு விராட்டு, புருஷர், காலர் என்பார் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில் செய்தற்கு அமைந்தாற் போன்றும், (48-ற் கூறியாங்கு) சங்காரகர்த்தாவாகிய உருத்திரர்க்கு ஹரர், மிருடர், பவர் என்பார் படைத்தலாதி செய்தற்கு அமைந்தாற் போன்றும், (47-ஆம் வினவிடையிற் கூறியாங்கு) காத்தற் கடவுளாகிய விஷ்ணுவுக்கு ராசசகுணத்தினராகிய (பிரமா எனப்படும்) அநிருத்தர், சத்துவகுணத்தினராகிய (விஷ்ணு எனப்படும்) பிரத்தியும்நர், தாமசகுணத்தினராகிய (ருத்திரர் எனப்படும்) சங்கர்ஷணர் என்பார் படைத்தல் காத்தல் அழித்தல்செய்தற்கு அமைந்தாரென்று வாயுசங்கிதை முதலியகூறலின், அது பொருந்தும்.

54. விஷ்ணு உலகை உண்டவிடத்தும் அளந்தவிடத்தும் சிவபெருமான் அவற்றுக்குட்படாது மேலோங்கி நின்றார் என்பதைத் திராவிட சுருதிகளான் விளக்குக?

> " மாவலிவேள்வியில் மாணுருவாய்ச் சென்று
> மூவடிதாவென்றிரந்தவிம்மண்ணினை
> ஓரடியிட்டிரண்டாமடிதனிலே
> தாவடியிட்டான்,"

"ஞாலமேழும் உண்டு மண்டியாலிலைத் துயின்றவாதிதேவனே" என்றற்றொடக்கத்தனவாக நாலாயிரப்பிரபந்தங் கூற,

> "முன்னந்தாவியடிமூன்றளந்தவன்னான்முகன்
> றன்னந்தாளுற்றுணராததோர்தவநீதியே"

(திருப்பாதிரிப்புலியூர், ஞா., 9)

" மண்டான்முழுதுமுண்டமாலுமலர்மிசைமேலயனு
மெண்டானறியாவண்ணநின்றவிறைவன்மறையோதி"
(திருச்சண்பைநகர், ஞா., 9)

என்றற்றொடக்கத்தனவாகத் திராவிட சுருதி உரைக்கின்றமையான், பிரகிருதிவரையில் வியாபித்துநின்ற நாராயணரினும் சூக்குமப்பிரகிருதி பரப்பிரகிருதிகளைக் கடந்து நின்ற சிவபிரானரது நிரவதிவியாபகப்பெருமை நன்கு புலப்படும்.

55. ஏகான்மவாதச் சுருதிகளிலே ஆன்மாவானது பிரம விஷ்ணு உருத்திரர்களுக்குத் துரியமாகக் கூறப்படுகின்றதா?

𑌚𑌿𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌹𑍍𑌯𑌹𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑍇𑌤𑌿 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌨𑍁 |
𑌰𑌕𑍍𑌷𑌕𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌸𑍃𑌷𑍍𑌟𑍇𑌸𑍍𑌤𑍁𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 |
𑌸𑌂𑌹𑌾𑌰𑍇 𑌰𑍁𑌦𑍍𑌰 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌮𑌿𑌥𑍍𑌯𑍇𑌤𑌿 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌨𑍁 |

"(ஆன்மாவாகிய) நான் சின்மாத்திரமாகவே இருக்கின்றேன்; அநாத்துமா இல்லை என நிச்சயி; காப்பவர் விஷ்ணு என்பதும், படைப்பவர் பிரமா என்பதும், அழிப்பவர் உருத்திரர் என்பதும் பிறவும் பொய்" என ஆன்மாவைத் துரியமாகநிறுத்தி மாயாவாத தேஜோவிந்தூபநிடதங் கூறுகின்றது.

56. (46-ஆம் இலக்க வினாவிடையிற் கண்ட) பிரமாவுக்கும், (47-ற் கண்ட) விஷ்ணுவுக்கும், (48-ற் கண்ட) உருத்திரர்க்கும் துரியராகிய (50-ஆம் இலக்கத்துச்) சிவபிரானே (55-ஆம் இலக்கத்திற் கண்ட) பிரம விஷ்ணுக்களுக்கு மேலாகக் கூறப்பட்ட ஆன்மாவினும் சிறந்த வாஸ்தவப் பிரமம் என்பதைச் சிறிது நிரூபணஞ்செய்க?

I. அநாத்துமாவுக்கு வேருயுள்ளது ஆன்மா என்று, இதனையே ஏகான்மவாதிகள் முடிவாகக் கூற, அவ்வான்மாவை

𑌅𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌪𑌰𑍇 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌜𑍀𑌵𑌾 𑌪𑌶𑌵 𑌨𑌸𑌂𑌶𑌯𑌃 |

"அநாத்துமாவுக்கு மேலுள்ளவெல்லாம் பசுக்கள், சந்தேகமில்லை" என்று சிவபுராணங் கூறுகின்றது.

𑌤𑌯𑍋𑌰𑌨𑍍𑌯𑌃 𑌪𑌿𑌪𑍍𑌪𑌲𑌂 𑌸𑍍𑌵𑌾𑌦𑍍𑌵𑌤𑍍𑌤𑍍𑌯𑌨𑌶𑍍𑌨𑌨𑍍𑌨𑌨𑍍𑌯𑍋 𑌽𑌭𑌿𑌚𑌾𑌕𑌶𑍀𑌤𑌿|

II. "(ஒரு விருக்ஷத்திருந்த இரு அழகிய பட்சிகளுள்) ஒன்று இனிய பழத்தை உண்கின்றது; மற்றது உண்ணாது பார்த்துக்கொண்டிருக்கின்றது" என்னும் முண்டகோபநிடத சுருதியானது ஆன்மாவையும் சிவபெருமானையும் உணர்த்துவதாமென, வெளிப்படையாய் விளங்கற்பாலதாயவிடத்தும், இச்சுருதிக்குப் பொருள் செய்கின்றேமென்று ஏகான்மவாதியார் தொடங்கி, ஆன்மாவைச் சத்துவம் (அந்தக்கரணம்) என்றும், ஈசரை

க்ஷேத்திரஞ்ஞன் (ஆன்மா) என்றுந் தமது சூத்திர பாடியத்திற் பொருட் படுத்திக் கீழே ஈர்த்தார்; அங்ஙனமாயின்,

ப்ரதா நக்ஷேத்ரஜ்ஞபதிர் குணேசஃ (சுவே. 6. 16)

"பிரதானம் (பாசம்), க்ஷேத்திரஞ்ஞன் (பசு) என்னும் இரண்டுக்கும் பதியாயுள்ளார் சர்வஞ்ஞதாதி குணங்களையுடைய சிவபெருமான்" என்னுஞ் சுவேதாசுவதர மந்திரத்திற் கண்ட க்ஷேத்திரஞ்ஞனிலே இந்த க்ஷேத்திரஞ்ஞனும் முற்றுமாயின், அதற்கு மேலுள்ள குணேசராகிய சிவபெருமான் சாந்தியாதீதகலாசக்கரத்தின் பாலராகிய சிவபெருமானேயாய் முற்றுவர். (முண்ட. 3.1: 1, 2, 3) ற் கண்ட "உண்ணாத பட்சியாகிய (ஈசர்) அந்தக் குணேசராயே (சிவபெருமானையே) முற்றுவாரன்றி, ஏகான்மவாதியார் கூறியவாறு ஓர்காலும் க்ஷேத்திரஞ்ஞனாகமுற்றமாட்டார். ஆகலின், அன்னத்தைப் பிரமம் என்றும், பிராணனைப் பிரமம் என்றும், மனசைப் பிரமம் என்றும், அக்கினியைப் பிரமம் என்றும், ஆதித்தியனைப் பிரமம் என்றும், இந்திரனைப் பிரமம் என்றும் சுருதிகள் சிற்சில கூறுமாறு போல, சில உபநிடதங்களினும் க்ஷேத்திரஞ்ஞனாகிய ஆன்மாவானது பிரமம் எனக் கூறப்படுகின்றது.

57. ஆன்மாவைப் பிரமம் என்று உபநிடதங்களும் சங்கராசாரியர் முதலாயினோருங் கூற, அதனைப் பசு என்றும், சீவன் என்றும் கூறல் அடுக்குமா?

அடுக்கும்! அடுக்கும்!! ஒரு ஊரிலே சிற்றரசராகிய ஓர் பூபதியானவர் **(Zemindar)** மஹாராஜா, சுவாமிகள் என்றற்றொடக்கத்தனவாக வாழ்த்திப் பூஜிக்கப்படினும், அவர் பூமண்டல ஏகசக்கிராதிபதியாகார். அதுபோல மாயாவாதச்சுருதிகளிலே அப்பசுக்களாகிய ஆன்மாக்கள் பிரமம் எனப்படினும், அவை (50-ஆம் இலக்கவினவிடையிற் கண்டவாறு) ஈசகேநாதி பரசுருதிகளினும், பிரமசூத்திரமுதலியவைகளினும் பிரதிபாதிக்கப்பட்ட பிரமமாகாவென்க.

58. மாயை எத்தனை வகைப்படும்?

மாயா மாயா ச மாயா ச மாயாசைவ த்ரிவிதா ஸ்ம்ருதா।

"மாயை (மகாமாயை), மாயை (அசுத்தமாயை), மாயை (பிரகிருதி) என மாயை மூன்று" எனச் சிவாகமங் கூறுகின்றது.

59. அவை புராணத்தினும் கூறப்படுகின்றனவா?

மஹாமாயா ச மாயா ச ப்ரக்ருதிஸ் த்ரிகுணேதி ச।

*மகாமாயை, மாயை, முக்குணத்தோடியன்ற பிரகிருதி என மாயை முத்திறப்படும் (சை. வா. **Pt. I.** 25: 34)

*மாயாவாத மகாநாராயணோபநிடதத்துக் காணப்படும் "மகாமாயை" மூலப்பிரகிருதி "மாயை"யைச் சுட்டுமன்றி, ஈண்டுக் கூறப்பட்ட மகாமாயையை உணர்த்தாது.

60. மகாமாயையும், மாயையும், பிரகிருதியும் வேறு எங்ஙனம் கூறப்படும்?

𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌸𑍍𑌥𑍂𑌲𑌾𑌂𑌸𑍍𑌥𑍂𑌲𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌾 𑌪𑌰𑌾𑌤𑍍𑌵𑌸𑍌 ।

அவை "(மகாமாயை) பரப்பிரகிருதி எனவும், (மாயை) சூக்குமப்பிரகிருதி எனவும், (பிரகிருதி) தூலப்பிரகிருதி எனவும் பெயர் பெறு"மெனச் சிவாகமங் கூறுகின்றது.

61. மகாமாயையின் பரியாயநாமங்கள் யாவை?

"விந்து, குண்டலிநீ எனப் பவுட்கராகமத்தினும், வித்தை, மாயை, பரை, பரவாகீசுவரி" எனச் சிந்தியவிசுவசாதாக்கிய முதலியவற்றினும் கூறப்படுகின்றது.

62. சிவதத்துவம் என்பது யாது?

𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌕𑌾𑌲𑍇 𑌤𑍁 𑌕𑍁𑌟𑌿𑌲𑌃 𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑍍𑌯𑌾𑌕𑌾𑌰𑍇𑌣 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ।
𑌤𑌨𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍁𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌂 𑌵𑌪𑍁𑌰𑍍𑌨𑌾𑌦𑍋𑌽𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ।
𑌤𑌦𑍀𑌤𑌂 𑌪𑌰𑌾𑌮𑍋𑌹𑌪𑌰𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌨𑌿𑌰𑌾𑌮𑌯𑌮𑍍 ।
𑌶𑍁𑌦𑍍𑌧𑌸𑍍𑌫𑌟𑌿𑌕𑌸𑌙𑍍𑌕𑌾𑌶𑌂 𑌶𑌿𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌤𑌦𑍁𑌚 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ।

𑌅𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌮𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑍍𑌯𑌮𑌨𑍌𑌪𑌮𑍍𑌯𑌮𑌨𑌾𑌮𑌯𑌮𑍍 ।
𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌂 𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌧𑍍𑌰𑍁𑌵𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ।
𑌶𑌿𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌧𑍍𑌵𑍋𑌪𑌰𑌿𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ।
𑌓𑌂𑌕𑌾𑌰𑌾𑌤𑍍𑌮𑌤𑌯𑌾 𑌭𑌾𑌤𑌿 𑌶𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑍀𑌤𑌃 𑌪𑌰𑌶𑍍𑌶𑌿𑌵𑌃 ॥

"சிருஷ்டிகாலத்திலே குடிலை குண்டலியாகாரமாயுற்றது; அதன் மத்தியிலே ஞானம் உதித்தது; அதன் வடிவம் நாதமெனப்படும்; இது நிராமயமாகிய பரதத்துவமாய், சுத்தஸ்படிகசங்காசமாயுள்ள சிவதத்துவ"மென ஞானசித்தியாகமமும்,

"அளக்கவும் உரைக்கவும் இயலாததும், உபமனிலாததும், அநாமயமாயதும், சர்வவியாபகமாயதும், நித்தியமாயதும், நிலையாயதும், எல்லாவற்றுக்கும் மேலாய நாயகத்தன்மை பூண்டதாயுமுள்ளது சிவதத்துவம்; சாந்தியாதீதராய்ப் பரசிவனருளராக, இது ஓங்கார சுவரூபமாய் விளங்குவது" என்று சுவாயம்புவாகமமும் கூறுகின்றன.

63. சிவதத்துவம் ஐந்தின் உற்பத்தியும் வியாபாரமும் என்னை?

𑌉𑌦𑍍𑌯𑍋𑌗𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌸𑌾𑌰𑌤𑍀𑌵 𑌵𑌿𑌕𑍍𑌷𑍋𑌭𑌾𑌚𑍍𑌚 𑌕𑌾𑌰𑌾𑌙𑍍𑌗𑌂 𑌸𑌿𑌸𑍃𑌕𑍍𑌷𑌾 𑌬𑌿𑌨𑍍𑌦𑍋𑌃 𑌪𑍍𑌰𑌾𑌦𑍁𑌰𑍍𑌭𑌵𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌸𑌦𑍃𑌶𑌂 𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌤𑌾𑌦𑍃𑌶𑍍𑌚 𑌸𑌦𑌾𑌶𑌾𑌖𑍍𑌯𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑍍 । 𑌜𑍍𑌞𑌪𑍍𑌤𑍇𑌨𑍍𑌶𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌈𑌶𑌾𑌵𑌿𑌸𑌰𑌿𑌤𑌂 𑌤𑌚𑍍𑌚 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾

𑌶𑌕𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑌾𑌚𑍍𑌚 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌖𑍍𑌯𑌾𑌶𑌕𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑌾𑌤𑍍𑌤𑍁 𑌨𑌾𑌮𑌿𑌵𑌹𑌾𑌤𑍍𑌤𑍇𑌷𑍁 𑌶𑍁𑌦𑍍𑌧𑌵𑌿𑌦𑍍𑌯𑌾
𑌵𑍍𑌯𑌜𑌾𑌯𑌤॥

"உலகத்தைச் சிருஷ்டி செய்ய விருப்பமுற்ற பரமசிவனுடைய வியாபாரத்தினுல் விந்துவினின்று ஆதியிற் கலாபுவனங்களானிறைந்த சத்திதத்துவம் உண்டாயிற்று; அப்பரமேசுரரால் சத்திதத்துவத்தினின்றும் ஞானக்கிரியைகள் சாமியமாய சாதாக்கியதத்துவம் உண்டாயிற்று; கிரியாசத்திசம்பந்தத்தினுல் அதினின்று மந்திரேசுவரர் அனந்தாதியரோடு ஈசுவரதத்துவம் உண்டாயிற்று. ஞானசத்திசம்பந்தத்தினுல் அதினின்று சப்தகோடி மகா மந்திரர் முதலாயினுரோடு சுத்தவித்தியாதத்துவம் உண்டாயிற்று." (சித். ஞான. 9)

64. *இவ்வைந்து தத்துவங்களும் எவர்க்கு ஸ்தானம்?*

𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌂 𑌪𑌰𑌮𑍇𑌶𑌸𑍍𑌯 𑌵𑌪𑍁𑌰𑍍𑌲𑍋𑌕𑍇 𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑍍𑌯𑌤𑍇 ।
𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑌂 𑌪𑍍𑌰𑌥𑌮𑌂 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂 𑌸𑌕𑌲𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑌮𑍍 ।
𑌤𑍃𑌤𑍀𑌯𑌂 𑌸𑌕𑌲𑌂 𑌚𑍈𑌵 𑌨𑌾𑌨𑍍𑌯𑌥𑍇𑌤𑌿 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮𑌾𑌃 ।

𑌏𑌕𑌂 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌂 𑌶𑌿𑌵𑌾𑌖𑍍𑌯𑌂 𑌤𑍁 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂 𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑌂 𑌤𑍃𑌤𑍀𑌯𑌂
𑌤𑍁 𑌮𑌹𑍇𑌶𑌾𑌖𑍍𑌯𑌂 𑌸𑍍𑌥𑍂𑌲𑌂 𑌤𑍁 𑌤𑍃𑌤𑍀𑌯𑌕𑌮𑍍॥

"சிவத்துக்குள்ள வடிவம் மூன்றனுள்ளே (சிவதத்துவ சத்திதத்துவங்களே அதிஷ்டித்து நிற்பவர்) தலையாய சுசூட்சும நிஷ்கள வடிவினராகிய சிவன்; (சாதாக்கிய தத்துவத்தை அதிஷ்டித்துநிற்பவர்) இரண்டாவதாகிய சூட்சும சகள நிஷ்கள வடிவினராகிய சதாசிவர்; (ஈசுவரம் சுத்தவித்தைகளே அதிஷ்டிப்பவர்) மூன்ருவதாகிய ஸ்தூல சகள வடிவினராகிய மகேசுவரர்." (இலிங். பூரு. 75: 30, 31; 72: 164)

65. *தத்துவம் என்ருல் என்னே?*

𑌆𑌪𑍍𑌰𑌲𑌯𑌂 𑌯𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌭𑍋𑌗𑌦𑌾𑌯𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑍍 ।
𑌤𑌤𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌨 𑌶𑌰𑍀𑌰𑌘𑌟𑌾𑌦𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌤𑌃॥

"தாத்துவிகமாகிய சரீராதிகள் போல உடனே அழிவதன்றிப் பிரளயகாலம் வரையும் நிலேயுறுதலான் தத்துவம் எனப்படும்" என்று ஆகமம் கூறுகின்றது.

66. *தத்துவங்களுக்கும் அதை அதிஷ்டிக்கும் தத்துவாதிபர்க்கும் பெயர் ஒன்ருதற்குப் பிரமாணம் என்னே?*

𑌯𑌾𑌨𑌿 𑌨𑌾𑌮𑌾𑌨𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑌾𑌂 𑌤𑌾𑌨𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌧𑌿𑌪𑍇𑌷𑍍𑌵𑌪𑌿 ।
𑌜𑍍𑌞𑍇𑌯𑌾𑌨𑍍𑌯𑍇𑌵𑌂 𑌯𑍋𑌜𑌯𑍇𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌾𑌹 𑌶𑍍𑌰𑍀𑌹𑌰𑌃॥

"எவ்வெப்பெயர்கள் எவ்வெத்தத்துவங்கட்குளவோ, அவ்வப்பெயர்கள் அவ்வவற்றை அதிஷ்டிக்கும் அதிபர்களுக்குமாம்" எனச் சர்வஞ்ஞானோத் தராகமம் கூறுகின்றது.

67. *வித்தியாதத்துவ ஆன்மதத்துவங்களின் தோற்றம் எவ்வாறு?*

மாயாதோ (அ)நந்தவ்யாபாராத் ப்ரஸூதி: கலாகாலயோ: நியத்யா
வித்யாராகௌ கலாத: ப்ரக்ருதிஸ்ததோ ருத்ராத் புருஷோ(அ)ப்யகௌணதேஜாத்|
பும்ஸ்தத்வாத் ப்ரக்ருதேர்குணாஸ் த்ரிவிதகுணமயாத்புத்தி: த்ரிகுணேனாஹம்
ப்ராக் ஸத்வாக்ஷாணிமனோவஹங்காராத்: ஸ்வகுணமதகுணா: வக்ஷ்யந்தாநி
தாநி||

"சூக்குமப் பிரகிருதி எனப்படும் மாயையினின்று ஈசுவரதத்துவத்தினரா கிய அனந்தருடைய நியோகத்தினுற் கலாதத்துவமும் காலதத்துவமும் நியதிதத்துவமும், கலாதத்துவத்தினின்று வித்தியாதத்துவமும் ராகதத் துவமும் உண்டாயின. முற்கூறிய மாயையினின்று உருத்திரரோடு புருடதத்துவம் உண்டாயிற்று; பின்னர்க் கலாதத்துவத்தினின்று பிரகிருதி யும், இதினின்று (சத்துவம் ரஜஸ் தமஸ் என்னும்) குணதத்துவமும், இதி னின்று முக்குணரூபமாகிய புத்திதத்துவமும், இதினின்று முக்குணரூப மாகிய அகங்காரமும், சாத்துவிககுணமாகிய தைசசவகங்காரத்தினின்று மனசும், (சித்தமும்), சுரோத்திராதி ஞானேந்திரியம் ஐந்தும், இராசசகுண மாகிய வைகரியகங்காரத்தினின்று வாக்காதி கன்மேந்திரியம் ஐந்தும், தாமசகுணமாகிய பூதாதியகங்காரத்தினின்று சப்தாதி தன்மாத்திரை ஐந் தும், இத்தன்மாத்திரைகள் ஐந்தினின்று ஆகாசாதி பஞ்சபூதங்களும் தோன்றின." (சித். ஞான. 10)

68. *பிருதிவியாதி தத்துவங்கள் ஒன்றுக்குமேலொன்று எவ்வாறு வியாபகப் படும்?*

பிருதிவியிற் பத்துமடங்கு அப்பு, இதிற் பத்துமடங்கு தேயு, இதிற் பத்துமடங்கு வாயு, இதிற் பத்துமடங்கு ஆகாசம், இதிற் பத்துமடங்கு (ஞானேந்திரியம், கன்மேந்திரியம், தன்மாத்திரை, மனங்களடங்கிய) அகங் காரம், இதிற் பத்துமடங்கு புத்தி, இதிற் பத்துமடங்கு குணம், இதிற் பத் துமடங்கு பிரகிருதி, இதில் நூறுமடங்கு ராகம், இதில் நூறுமடங்கு வித்தை, இதில் நூறுமடங்கு நியதி, இதில் நூறுமடங்கு கலை, இதில் நூறு மடங்கு காலம், இதில் நூறுமடங்கு அசுத்தமாயை, இதில் ஆயிரமடங்கு சுத்தவித்தை, இதில் ஆயிரமடங்கு ஈசுவரதத்துவம், இதில் ஆயிரமடங்கு சாதாக்கியதத்துவம், இதில் இலக்ஷமடங்கு சத்திதத்துவம், இதில் இலக்ஷ மடங்கு சிவதத்துவம் என்க.

69. இத் தத்துவங்கள் ஒன்றின்மேலொன்று சூக்குமமாயுளவோ?

𑌤𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌦𑍇𑌃 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌣𑍍𑌯𑌾𑌹𑍁𑌸𑍍𑌸𑌹𑌂𑌕𑍃𑌤𑌿𑌃 ।
𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌤𑌰𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌰𑍇𑌵 𑌚 ।
𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌕𑌲𑌾𑌦𑌿𑌵𑌰𑍍𑌗𑍋𑌽𑌪𑌿 𑌮𑌾𑌯𑌾𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌤𑌰𑌾 𑌤𑌤𑌃 ॥

"சப்தாதி தன்மாத்திரைகள் பிருதிவியாதி ஐந்து, தத்துவங்களினும் சூக்குமம்; அகங்காரதத்துவம் அவற்றினும் சூக்குமம்; அதினும் புத்திதத்துவம் அதிசூக்குமம்; அதினும் பிரகிருதி அத்தியந்த சூக்குமம்; அதினும் கலாதி தத்துவங்கள் சூக்குமம்; அவற்றினும் அசுத்தமாயை அதிசூக்குமம்." (ப. ஆ. மாயா. 7, 8)

70. சிருட்டி எத்தனை வகைப்படும்?

𑌮𑌾𑌯𑌾𑌯𑌾 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌃 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌸𑍍𑌥𑍂𑌲𑍇𑌤𑌿 𑌭𑍇𑌦𑌤𑌃 ।
𑌆𑌤𑍍𑌮𑌸𑍍𑌥𑌚𑌿𑌦𑍍𑌵𑍍𑌯𑌞𑍍𑌜𑌿𑌕𑌾 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌾 𑌸𑍃𑌷𑍍𑌟𑌾 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 ।
𑌸𑍃𑌷𑍍𑌟𑌾 𑌭𑍁𑌵𑌨𑌦𑍇𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌸𑍃𑌤𑌾 ॥

"மாயையினின்றுமுண்டாகிய சிருட்டி சூக்குமம் தூலம் என இருவகைப்படும்; ஆன்மாவில் தத்துவரூபமாக ஞானசத்தி வியஞ்சகமாயிருக்கும் கலாதிதத்துவம் சூக்குமசிருட்டி எனவும், புவனரூபமும் சரீரேந்திரியமும் தூலசிருட்டி எனவும்படும்" (ப. ஆ. மாயா. 60, 61)

71. தத்துவங்கள் பின் எத்தனை வகைப்படும்?

தத்துவங்கள் பொதுவும், சிறப்பும், பொதுச்சிறப்புமென முத்திறப்படும்; புவனவடிவாகிய தத்துவங்கள் எல்லோர்க்கும் பயன்றருதலிற் பொதுவாம்; சூக்குமதேகவடிவாகிய தத்துவங்கள் போகநுகர்ச்சியின் பொருட்டுத் தனக்குப் பயன்றருதலிற் சிறப்பாம். தூலதேகவடிவாகிய தத்துவங்கள் தனது போக நுகர்ச்சிக்கும், சந்தனம் பூமாலைபோல மனைவி முதலியோர் அநுபவித்தற்கும் வாய்ந்தமையிற் பொதுச்சிறப்பாம். இதனாற் புவனவடிவாகிய தத்துவங்கள் முப்பத்தாறுப் பொதுவாய்ப் புறத்தே நிற்றல்போல, அகத்தே ஆன்மாவைப்பற்றி முப்பத்தாறு தத்துவங்களும் சூக்குமமாய்நிற்குமென்றுணர்க.

72. இம்முப்பத்தாறு தத்துவங்களினும் அடங்கிய புவனங்கள் யாவை?

பிருதிவிதத்துவத்தில் நூற்றெட்டுப்புவனங்களும், அப்புமுதலிய இருபத்துமூன்று தத்துவங்களில் ஐம்பத்தாறு புவனங்களும், வித்தியாதத்துவங்கள் ஏழினும் இருபத்தேழு புவனங்களும், சுத்தவித்தைமுதலிய மூன்று தத்துவங்களிற் பதினெட்டுப் புவனங்களும், சத்திதத்துவ சிவதத்துவங்களிற் பதினைந்து புவனங்களும் உளவாம்.

73. *சிவதத்துவ சத்திதத்துவங்களிலுள்ள புவனங்கள் யாவை?*

அநாசிருதை, அநாதை, அனந்தை, வியோமரூபிநீ, வியாபினி, ஊர்த்துவகை, மோசிகை, ரோசிகை, தீபிகை, இந்திகை, சாந்தியாதீதை, சாந்தி, வித்தை, பிரதிஷ்டை, நிவிர்த்தி என்னும் புவனங்களாம். மற்றைய தத்துவங்களிலுள்ள புவனங்களின் பெயர்களைச் சிவாகமங்களினும் சைவபுராணங்களினுங் காண்க.

74. *முண்டகம், பிருகதாரணியம், கைவல்லியம், தைத்திரீயமகாநாராயணம் என்னும் உபநிடதங்களிலே "பிரமலோகேஷு" (பிரமலோகங்களில்) எனப் பன்மையிற் கூறியதற்குக் காரணம் என்னை?*

(73-ஆம்) இலக்க வினுவிடையிற் கண்டவாறு அநேக புவனங்கள் பிரமலோகத்தினவாய சத்திதத்துவ சிவதத்துவங்களில் உளவாமாதனேக்கியாம்.

75. *ஈண்டுப் பிரமலோகம் என்பது பிரமாவுடைய உலகம் எனப்படாதா?*

படாது. பிரமாவின் உலகம் தத்துவங்களுள்ளே கீழுற்றதாயும், புநராவர்த்தி (மீளச் செனனம்) கொடுப்பதாயுமிருத்தலின், அது பொருந்தாது.

76. *அந்தப் பிரமலோகம் என்பது விஷ்ணுவுலகமாகாதா?*

விஷ்ணுவினுடையவுலகம் மூலப்பிரகிருதிப் பாலதாமாதலின் அதுவும் உபசாரமாத்திரையாய்ச் செல்லுமன்றி வாஸ்தவத்திற் செல்லுமாறின்று.

77. *மாயாவாதி கூறும் தன்னைப் பார்ப்பதாகிய பிரகிருதிப்பாற்பட்ட பிரமத்தில் அது முற்றுதா?*

(I) *அதுவும் முற்றுது; அவர் புருடதத்துவத்துக்கு மேலுள்ள தத்துவ விசாரணை இலராமாதலினுலும்,*

(II) 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌮𑌭𑌿𑌸𑌂𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌨 𑌚 𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌨 𑌚 𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 (சா. 8. 15. 1)

"அவன் *பிரமலோகத்தை அடைந்து மீளத்திரும்புவனல்லன் மீளத்திரும்புவனல்லன்" எனச் சாந்தோக்கியோபநிடதம் சிவலோகத்தையே முடிவாகக் கூற, இதனை ஆதாரமாகக்கொண்டே வேதவியாசர்

(III) 𑌅𑌨𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌶𑍍𑌶𑌬𑍍𑌦𑌾𑌤𑍍 𑌅𑌨𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌶𑍍𑌶𑌬𑍍𑌦𑌾𑌤𑍍 |

"மீளத்திரும்புவதில்லை மீளத்திரும்புவதில்லை" என வேதாந்த சூத்திரஞ் (4. 4. 22) செய்தமையானுமாம்.

---

* சிவாத்துவித சைவபாடியத் தமிழ் மொழி பெயர்ப்பு 72-ஆம் பக்கம், 317.

78. *சிவதத்துவமாவது யாது ?*

இதை (62-ஆம்) இலக்கவினாவிடையிற் காண்க.

79. *சத்திதத்துவமாவது யாது ?*

𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌤𑍁 𑌕𑍍𑌰𑌿𑌯𑍋𑌤𑍍𑌸𑌰𑍍𑌗𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑌪𑍁𑌰𑍍𑌬𑌿𑌨𑍍𑌦𑍍𑌵𑌾𑌖𑍍𑌯𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇।

"ஞானம் (நாதம்) வாயிலாகக் கிரியை தோற்றிற்று; இதன் (சத்திதத்துவத்தின்) வடிவம் விந்து எனப்படும்" என்று ஞானசித்தி கூறுகின்றது.

80. *சாதாக்கியதத்துவமாவது யாது ?*

𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌸𑌮𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌂 𑌕𑌰𑍍𑌤𑍃𑌸𑌾𑌦𑌾𑌖𑍍𑌯𑌰𑍂𑌪𑌕𑌮𑍍।
𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑌾𑌖𑍍𑌯𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌤𑍁 𑌸𑌕𑌳𑌂 𑌨𑌿𑌷𑍍𑌕𑌳𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍॥

"ஞானக்கிரியை ஒத்துவியாபித்தது கர்த்திரு சாதாக்கியவடிவம்; இச்சதாசிவதத்துவம் சகளநிஷ்களமாகும்" என்று ஞானசித்தியிற் கூறப்பட்டது.

81. *ஈசுவரதத்துவமாவது யாது ?*

𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑍍𑌯𑍂𑌨𑌂 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌧𑌿𑌕𑍍𑌯𑌂 𑌮𑌹𑍇𑌶𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌃।

"ஞானம் குறைந்து கிரியை அதிகரித்தது மகேசுவரதத்துவம்" என்றது ஞானசித்தி.

82. *சுத்தவித்தியாதத்துவமாவது யாது ?*

𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌪𑌕𑌰𑍍𑌷𑍇𑌣 𑌜𑍍𑌞𑌾𑌨𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑍁𑌲𑍍𑌬𑌣𑌂 𑌤𑌥𑌾।
𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌯𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌧𑌿𑌕𑍍𑌯𑍇𑌨 𑌤𑌦𑍍𑌵𑌤𑌾॥

"கிரியை குறைந்து ஞானமேறியிருத்தல் சுத்தவித்தியாதத்துவம்" என்று சிந்தியாகமத்திற் கூறப்பட்டது.

83. *அசுத்தமாயையாவது யாது ?*

𑌮𑌯𑌤𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌜𑌶𑍁𑌦𑍍𑌧𑌤𑍍𑌵𑌂 𑌮𑌾𑌯𑍇𑌤𑌿 𑌨 𑌸𑍂𑌚𑌿𑌤𑌾।
𑌨𑌿𑌤𑍍𑌯𑍈𑌕𑌾 𑌵𑍍𑌯𑌾𑌪𑌿𑌨𑍀 𑌵𑌸𑍍𑌤𑍁𑌰𑍂𑌪𑌾 𑌕𑌰𑍍𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌽𑌶𑌿𑌵𑌾।
𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑍀 𑌚 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌸𑌕𑌲𑌾𑌨𑌾𑌂 𑌮𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌃।

"பிரபஞ்சம் அனைத்தையும் தன்விகாரமாகச் செய்வது மாயை எனக் கூறப்படும்; அது நித்தியமாய், ஒன்றாய், (எவற்றினும்) வியாபகமாய், பாவரூபமாய், கன்மங்கட்காசிரயமாய், பசுக்களுக்குச் சம்சாரத்தைப் பிறப்பிப்பதாய், பிரளயாகலர் சகலர் யாவர்க்கும் சாதாரணமாயிருக்கும்." (ப. ஆ. மாயா. 1, 2)

84. *அசுத்தமாயையினின்று தோற்றிய ஐந்து தத்துவங்கள் யாவை ?*

𑌕𑌲𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌚 𑌰𑌾𑌗𑌶𑍍𑌚 𑌕𑌾𑌲𑍋 𑌨𑌿𑌯𑌤𑌿𑌰𑍇𑌵 𑌚।
𑌪𑌞𑍍𑌚𑍈𑌤𑌾𑌨𑌿 𑌚 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑌿 𑌮𑌾𑌯𑍇𑌯𑌾𑌨𑌿 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮𑌾𑌃॥

"கலை, வித்தை, ராகம், காலம், நியதி என்னும் ஐந்தும் மாயாகாரிய தத்துவங்கள்." (ப. ஆ. பாச. 1, 2)

85. கலை என்பது யாது?

ஶோத⁴நம் த்வநயா ஹி கலா சைதந்ய ப்ரஸாத⁴நீ।

"சைதன்னியம் வெளிப்படுதற்கு எப்பிரகாரத்தினாலும் மலத்தைச் சிறிது நீக்குவது கலாதத்துவம்" (ப. ஆ. பாச. 3)

86. காலதத்துவமாவது யாது?

அநந்தஶக்தேர்மாயாயா ஜாத: கால: ஸம்ப⁴வ:।
அதீதஶ்ச ப⁴விஷ்யஶ்ச த்ரிதா⁴ ஸம்போ⁴வர்த்தமாந:।
மலாநாம் பரிபக்வார்த²ம் காலதத்த்வஸம்ப⁴வ:॥

"அனந்தசக்தியையுடைய மாயையினின்று உண்டாயதாய், இறந்தகால நிகழ்கால எதிர்காலமென மூவகைத்தாய், மலத்தைப் பரிபக்குவப்படுத்தும் பொருட்டாயுள்ளது காலதத்துவம்" எனச் சிந்தியாகமம் கூறுகின்றது.

87. வித்தையாவது யாது?

ததோ வித்³யா கலாதத்த்வாத்³போ⁴கா³ர்த²ம் ஜாயதே(அ)ணுந:।
கலயா கர்த்ருயுக்தஸ்ய போ³த⁴லக்ஷணகர்மண:।
போ³த⁴கே நியதம் கரணம் ஸா வித்³யா ஶிவஶாஸநே।

"ஆன்மாவிற்குப் போகநிமித்தம் கலாதத்துவத்தினின்று தோற்றியதாய், கலையினாற் கர்த்திருபூதனுயுள்ள ஆன்மாவுக்குப் புத்தி கன்மத்தை அறிதற்குக் கரணமாயதெதுவோ அது சிவசாஸ்திரத்தில் வித்தை எனப்படும்." (ப. ஆ. பாச. 8, 9)

88. ராகமாவது யாது?

ப்ரவ்ருத்தஸ்ய ப்ரவ்ருத்த்யம்ஶே ராக³: ப்ரவர்த்ததே।

"விடயங்களிற் பிரவிருத்தியுள்ளவனுக்கு மிகுதியாகப் பற்றுண்டாமாறு பிரவர்த்திப்பது ராகம்." (ப. ஆ. பாச. 22)

89. நியதியாவது யாது?

நியதிஶ்ச ததா² கர்மப²லே நியமயத்யணூந்।

"கன்மபலத்தில் ஆன்மாவைப் பிரவர்த்திப்பது நியதி" (ப. ஆ. பாச. 24)

90. புருடதத்துவமாவது யாது?

பும்ஸ்த்வம் சாஸ்யாத்மந: ப்ரக்ருதிம் போ⁴க்துமுத்³யத:।
அவித்³யாதி³ஸம்யுக்த: பூருஷ: பரிகீர்த்தித:॥

"கலாதி பஞ்சகஞ்சுகங்களோடு கூடினவனுயும், அவித்தையோடிசைந்தவனு யும், பிரகிருதிபோக்கியத்தைப் புசித்தற்கு உத்தியுக்தனுயுமுள்ளவன் புருடன் எனப்படுவான்." (ப. ஆ. பும். 1, 2)

91. பிரகிருதி எங்கிருந்து தோற்றிற்று ?

𑌤𑌚𑍍𑌚 𑌮𑌾𑌯𑍋𑌦𑍍𑌭𑌵𑌂 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌕𑌲𑌾𑌤𑌃 𑌸𑍍𑌥𑍂𑌲𑌤𑌾𑌂 𑌗𑌤𑌮𑍍।
𑌗𑍁𑌣𑌾𑌦𑌿𑌕𑍍𑌷𑌿𑌤𑌿𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑌾𑌤𑌂 𑌯𑌤𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍॥

"மாயையினின்று தோற்றிக் கலையினின்று ஸ்தூலரூபத்தை அடைந்தது மூலப்பிரகிருதிதத்துவம்; இதினின்று குணதத்துவமுதற் பிருதிவியீருகிய தத்துவசமூகம் பிறந்தது" (ப. ஆ. பும். 17, 18)

92. பசு எத்தன்மைத்து ?

𑌪𑌶𑍁𑌃 𑌪𑌾𑌶𑌤𑍍𑌵𑌸𑌂𑌯𑍋𑌗𑌾𑌨𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌃 𑌪𑌶𑍁𑌰𑍍𑌨𑍋𑌚𑍍𑌯𑌤𑍇।
𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑍍𑌵𑌦𑍃𑌕𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌶𑌾𑌲𑍀 𑌕𑌲𑌾𑌹𑍀𑌨𑍋𑌽𑌪𑍍𑌯𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌃।
𑌵𑍍𑌯𑌾𑌪𑌕𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌮𑌯𑌃 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌃 𑌶𑌿𑌵𑌵𑌤𑍍𑌸𑌂𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌃॥

"மலசம்பந்தத்தினுலே ஆன்மா பசு எனப்படுவன், முத்தன் எனப்படான்; கலைகளோடு கூடாது ஞானக்கிரியைகளையுடையவனுய் ஈசனல்லாதவனுயினும், அவன் வியாபகனும், சின்மயனும், சூக்குமனுமாய்ச் சிவனைப்போலுள்ளான்." (ப. ஆ. பசு. 1, 2)

93. பசுக்கள் எத்தனை வகைப்படும் ?

𑌪𑌶𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌾 𑌜𑍍𑌞𑍇𑌯𑌾𑌃 𑌸𑌕𑌲𑌾𑌃 𑌪𑍍𑌰𑌲𑌯𑌾𑌕𑌲𑌾𑌃।
𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑌲𑌾𑌃..............................॥

" பசுக்கள் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என மூவகைப்படுவர்."
(ப. ஆ. பசு. 2, 3)

94. அவருட் சகலராவார் யாவர் ?

𑌜𑍍𑌞𑍋𑌽𑌪𑌿 𑌪𑌾𑌶𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌾𑌕𑌾𑌶𑍍𑌯𑍇𑌤𑍁 𑌕𑌲𑌾𑌦𑌿𑌨𑌾।
𑌭𑍋𑌗𑌾𑌯 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌬𑌦𑍍𑌧𑌾𑌃 𑌸𑌕𑌲𑌾𑌃 𑌪𑌰𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑍍𑌯𑌤𑍇॥

"மலத்தினுற் றடையுண்ட ஞானக்கிரியாசத்திகளையுடையராய், அந்த ஞானக்கிரியைகளின் ஏகதேசப்படர்ச்சி காரணமாகக் கலாதிதத்துவங்களோடு கூடினவராய், போகநுகர்ச்சியின் பொருட்டுக் கன்மசம்பந்தமுடையராய் இருப்பவர் சகலர்." (ப. ஆ. பசு. 4)

95. ஆன்மாவைப் போக நுகர்ச்சியின் பொருட்டுச் செலுத்தும் கலாதி தத்துவங்கள் எவ்வாறு பெயர் பெறும் ?

பஞ்சகஞ்சுகம் எனப் பெயர் பெறும்.

96. இங்கே கூறப்பட்ட ஆன்மாவை மாயாவாதிகள் தம்மாயாவாதோபநிடத நெறியானே எங்ஙனம் கூறுப?

வைதிக சுத்தாத்துவித சைவசித்தாந்த தத்துவப்படத்து D[1] ற் கண்டவாறு ஆன்மாவை நிர்க்குணப்பிரமம், கூடஸ்தப்பிரமம், சிவன், பரமசிவ முதலிய பெயர்களாற் கூறுப.

97. மாயாவாதோபநிடதங்களினன்றிச் சைவோபநிடதங்களினும் உபப்பிருங்கணங்களினும் அங்ஙனம் கூறப்படுதல் உண்டா?

ஆம். தத்துவப்படத்தில் D[2] ற் கண்டவாறு ஆன்மா சிவன், பரப்பிரமம், அரன், க்ஷேத்திரஞ்ஞன்முதலிய பெயர்களாற் கூறப்படுதல் காண்க.

98. ஆன்மாவாகிய சிவன் பஞ்சகஞ்சுக முறுமென்றமைக்கு உபப்பிருங்கணப் பிரமாணம் என்னை?

सर्वकर्तृत्वरूपा च सर्वज्ञत्वस्वरूपिणी।
पूर्णत्वरूपा नित्यत्वव्यापकत्वस्वरूपिणी।
शिवस्य शक्तयः पञ्च संकुचद्रूप भास्कराः।
ताः संकोचरूपेण विभान्त्यपि नित्यशः।
पशोः कलाविद्येति रागकालौ नियत्यपि।
तत्पञ्चकरूपेण भवन्त्येताः कलादिकाः।
किंचित्कर्तृत्वहेतुः स्यात् किंचित्तत्त्वैकसाधनः।
सा विद्या तत्प्रवेत्त्री स्याद् रागो विषयेष्वनुरञ्जकः।
कालो हि भावाभावानां भासना भासनात्मकः।
[illegible] विधाति विधीयते।
इदं त्वेकत्र कर्तव्यमिति नियामिका।
नियतिः स्याद् विभोः शक्तिः [illegible] पशुः॥

"மலத்தாற் றடுக்கப்பட்ட 1. முற்றுத்தொழில், 2. முற்றறிவு, 3. பூரணத்துவம், 4. நித்தியத்துவம், 5. வியாபகத்துவம் என்னும் இவ்வைந்து சத்திகள் சிவனுக்கு (ஆன்மாவுக்குப்) பொதுவகையான் விளங்கினும், (சிறப்புவகையான் அவை விளங்குமாறு), அவற்றிற்கியைய 1. சிறுதொழிலை விளக்குதற்குக் காரணமாகிய கலை, 2. சிற்றறிவை விளக்குதற்குக் காரணமாகிய வித்தை, 3. விடயங்களில் இச்சையைப் பிறப்பித்தற்குக் காரணமாகிய ராகம், 4. உளவும் இலவுமாம் பொருள்களின் விளக்கம் விளக்கமின்மைகளை உணர்த்தற்குக் காரணமாகிய காலம், 5. இது என்னாற் செயற்பாலது செயற்பாலதன்று என நியமனத்திற்குக் காரணமாகிய நியதி என்னும் பஞ்சகஞ்சுகரூபம் பொருந்தினமையின், அவன் பசுவாக (புருடனாக) நழுவுற்றனன்" எனக் கூறப்பட்டது. (சை. கை. 10: 158—166)

99. ஆன்மா சீவன் எனவும், பசு எனவும், பஞ்சகஞ்சுகன் எனவும் பெயர் பெற்று நிற்கும் நிலை தத்துவப்படத்தில் எவ்வெழுத்தினாற் குறிக்கப்பட்டது?

E² என்னும் எழுத்தினாற் குறிக்கப்பட்டது.

100. ஆன்மாவுக்குக் கலாதி பஞ்சகஞ்சுகங்களை மாயையினின்று பிறப்பித்த அனந்தர் எத்தத்துவத்தில் இருப்பவர்?

படத்திற் கண்டவாறு (33-ஆம்) தத்துவமாகிய ஈசுவரதத்துவத்தில் உள்ளவர்.

101. ஆன்மா எனப்படும் சிவன் கலாதிபஞ்சகம் வாயிலாகச் சீவனாதல் (பசுவாதல்) ஒழிந்து, வேறு பிரகாரமாகச் சீவனாதலும் (பசுவாதலுங்) கூறப்பட்டுளதா?

ஆம்.

𑌸𑍍𑌵𑌾𑌂𑌶𑌰𑍂𑌪𑍇𑌷𑍁 𑌭𑌾𑌵𑍇𑌷𑍁 𑌮𑌾𑌯𑌾𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌭𑍇𑌦𑌯𑍋𑌃।
𑌶𑌿𑌵𑍋 𑌧𑍍𑌯𑌾𑌤𑌾 𑌨𑌿𑌜𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌪𑌾𑌰𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌮𑍍।
𑌤𑌿𑌰𑍋𑌧𑌾𑌯 𑌮𑌾𑌯𑌯𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌗𑍍𑌰𑌾𑌹𑌕𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍।
𑌤𑌦𑌾 𑌪𑍁𑌰𑍁𑌷 𑌇𑌤𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾 𑌤𑌤𑍍𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑍇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑌾 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃।
𑌸 𑌏𑌵 𑌹𑌿 𑌸𑌂𑌸𑌾𑌰𑍀 𑌮𑌾𑌯𑌯𑌾 𑌮𑍋𑌹𑌿𑌤𑌃 𑌪𑌶𑍁𑌃।
𑌶𑌿𑌵𑌾𑌦𑍍𑌭𑌿𑌨𑍍𑌨𑌂 𑌜𑌗𑌤𑍍𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾 𑌭𑌿𑌨𑍍𑌨𑌮𑌿𑌤𑍍𑌯𑌪𑌿।
𑌜𑌾𑌨𑌤𑍋𑌽𑌸𑍍𑌯 𑌪𑌶𑍋𑌰𑍇𑌵 𑌮𑍋𑌹𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌨 𑌪𑍍𑌰𑌭𑍋𑌃।
𑌯𑌥𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌜𑌾𑌲𑌿𑌕𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌯𑍋𑌗𑌿𑌨𑍋 𑌨 𑌭𑌵𑍇𑌦𑍍𑌭𑍍𑌰𑌮𑌃।
𑌗𑍁𑌰𑍂𑌪𑌦𑍇𑌶𑌾𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌪𑌿𑌤𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌃 𑌶𑌿𑌵𑍋 𑌭𑌵𑌤𑌿 [illegible]॥

"சுவாங்கரூபமாயுள்ள தத்துவங்களுள்ளே மாயையினாலுண்டாகிய தத்துவ விபேதங்களினாலே "தியாதா"வாகிய சிவன் (ஆன்மா) பரமைசுவரிய பூருவமாகத் தனது ரூபத்தை மாயையினாலே மறைத்துப் பதார்த்தம் அனைத்தையும் விஷயீகரிக்கப் புகுந்தவிடத்துப் புருஷன் எனப்படுகின்றான். இதுபற்றியே (தைத்திரீயசுருதியல்லாத மாயாவாத) சுருதி *"தத்சிருஷ்டவா" (அதைச் சிருஷ்டித்து)என்று கூறித் தொடக்கிக் காட்டிற்று; இந்தப் புருஷன் மாயையினாலே மோகிக்கப்பட்ட சம்சாரியாகிய பசுவாயினான்; இவனை விட்டு உலகம் பின்னம் என்றும், அந்தச் சிவனுக்குச் சீவன் பின்னம் என்றும் அறிகின்ற பசுவுக்கு என்றும் மோகமேயாம், (அந்த மோகம்) சிவனுக்கின்றாம். இந்திரசாலிகனுக்குப் போல யோகிக்குப் பிரமையில்லை; உபதேசத்தினாலே (மாயாவாதோபநிடதப் பிரகாரம் சச்சிதானந்த நித்திய பரிபூரணமுதலிய ஐசுவரியமுள்ள முன்னைப்) பரமைசுவரிய தருமம் இதுவாமென்று (மாயாவாத சர்வசாரோபநிடதத்துத் தத்துவமசி மகாவாக்கியத்தின் அசிபதலட்சியார்த்தம் வாயிலாக) உபதேசிக்கப்பட்டவுடன் அறிவுசொரூபனாகிய † சிவனாய் விடுகின்றான்" (சை. கை. 10: 153—157) என்று கூறப்பட்டது.

* நிராலம்போபநிடதம். † நிர்க்குணப்பிரமம்.

102. இந்தச் சிவன் (பிரமம்) தத்துவப்படத்தில் எவ்வாகிருதியாய் எவ்வெழுத்தினாற் குறிக்கப்படுகின்றது ?

நேத்திராகிருதியாய் இயற்றப்பட்ட D^1 என்னும் எழுத்தினாற் குறிக்கப்படுகின்றது.

103. கண்ணாகிருதியாக இயற்றப்பட்டமைக்குக் காரணம் என்னை ?

சூரியனும் ஒளியுடைப் பதார்த்தமாக, கண்ணும் * ஒளியுடைப்பதார்த்தமாக, சூரியனிலே இருள்பற்றாது கண்ணிலே இருள்பற்றுகின்றமை போல, பரப்பிரமசிவபெருமானும் சச்சிதானந்தர் எனப்படுவாராக, (ஏகான்மவாதிகளுடைய) நிர்க்குணப்பிரமமும் சச்சிதானந்தம் எனப்படுவதாக, சச்சிதானந்தகுணத்தையுடைய சிவபெருமானிலே மாயை அவலம்பியாது, நிர்க்குணப்பிரமத்திலே மாயை அவலம்பித்தலினால், மாயை பற்றப்பெறும் நிர்க்குணப்பிரமமானது இருள்பற்றப்பெறும் கண்ணாகிருதியாகப் படத்திலே நிரூபிக்கப்பட்டது.

104. உபாதியுற்ற சீவன் (பசு) எவ்வெழுத்தினாற் குறிக்கப்படுகின்றது ?

E^1 என்னும் எழுத்தினாற் குறிக்கப்படுகின்றது.

105. இந்த E^1 எழுத்தினாற் குறிக்கப்பட்ட உபாதியுற்ற சீவனுக்கும், E^2 எழுத்தினாற் குறிக்கப்பட்ட பஞ்சகஞ்சுகமுற்ற சீவனுக்கும் பேதமுண்டா ?

இடத்தினாற் பேதமுறினும் விஷயத்தினாற் பேதமின்றாம்.

106. இதற்குப் பிரமாணம் என்னை ?

அத்³வைதஶைவோऽயம் த்³வைதம் ந ஸஹதே க்வசித்|
ஸர்வஜ்ஞஸ்ஸர்வகர்தா ச ஶிவஸ்ஸ்வமாயயா|
ஸங்குசத்³ரூபவத் புமாந் பாஶஸம்ப³ந்த⁴வாந்|
ஸர்வஜ்ஞத்வாதி³ஶக்த்யைவ ஶாக்த்யேந ப்ரகாஶித:|
ப்ரக்ருதிஸ்த²: பாஶப³த்³தோ⁴ ஹ்யஞ்சிதப்ரக்ருதிஜாந் கு³ணாந்|
உதி³தாநத்³யாஸ்ஸ்த²: பாஶாந்விநாஶக:||

“ அத்துவைதசைவம் துவிதத்தை ஓரிடத்தும் சகிக்காது ; சர்வஞ்ஞனும் சர்வகர்த்தாவுமாகிய (98-ஆம் வினாவிடையிற் கண்ட) சிவனே D^1 தனது மாயையினாலே (101-ஆம் வினாவிடையிற் கண்டவாறு) சுருங்கிய வடிவுடையவனைப் போலாகிப் புருஷனாயினான் (பசுவாயினான்) E^1; (வைதிக பாசுபதோபநிடதப்பிரகாரம்) சர்வஞ்ஞனும் சர்வகர்த்தாவுமாகிய சிவன்

* சங்கராசாரியர் (பிரு. 4. 3. 4) ஆம் மந்திரபாடியத்தில் தைஜஸம் ஹி சக்ஷு: “ ஒளியுடைப்பொருளன்றோ கண் ” என்று வரைந்திருக்கின்றார் ; ஆண்டுக் காண்க.

D^2 கலாதி பஞ்சகத்தினலே போக்தாவாக [98-ஆம் விஞவிடையிற் கண்ட வாறு பசுவாக E^2 (புருடனக)] கற்பிக்கப்பட்டான்; மூலப்பிரகிருதியின் மேலுள்ள போக்தாவாம் புருஷனே மூலப்பிரகிருதியிற் பிறந்த போகங் களைப் புசிக்கின்றன்; (இவ்வாறு மாயாவாதோபநிடத நெறியானும் பாசுபதோபநிடதநெறியானும்) இரண்டிடத்தும் நேர்ந்த புருஷன் (பசு) விரோதமடைவானல்லன்" எனக் கைலாசசங்கிதை கூறிற்று. (சை. கை. 10: 166—169)

107. *கலாதி பஞ்சகஞ்சுகமுற்ற சீவனும் உபாதியுற்ற சீவனும் ஒன்ருமாயின், கலாதி பஞ்சகஞ்சுகமுறுதற்கு முன் நின்ற சிவஞகிய ஆன்மப்பிரமமும், உபாதி புறுதற்கு முன் நின்ற சிவஞகிய ஆன்மப்பிரமமும் வேறுபடுவனவா?*

வேறுபடுவனவன்று.

108. *அங்ஙனமாயின் மாயாவாதிகள் தமது மதத்தை முடிந்த எல்லையாகக் கோடல் நீதியா?*

அன்று: அவர்கள் பிரமம் மாயாவாதோபநிடதங்களினும், அவற்றைப் போதிக்கும் சிவபுராணங்களினும் பிருதிவிமுதன் மூலப்பிரகிருதிவரையு முள்ள (20-ஆம் விஞவிடையிற் கண்டவாறு) முப்பத்தாறு தத்துவமுடி விலேயே உளதென்பது பெறப்படுதலானும், அதற்குமேற் சுருதிப்பிரதி பாதிதமாகிய வித்தியாதத்துவங்கள் ஏழும் சிவதத்துவம் ஐந்தும் சேர்ந்த பன்னிரு தத்துவங்கட்கப்பால் மற்றோர் சிவப்பிரமம் வேதோபப்பிருங் கணங்கள் வாயிலாகப் பெறப்படுதலானும், சிவதத்துவத்தின்பாற்பட்ட சிவபெருமானே சிவன் எனவும், அதற்குப் பன்னிரு தத்துவங்கட்குக் கீழ் D^1 எழுத்தினுற் குறிக்கப்பட்டு மூலப்பிரகிருதிப்பாற்படும் சிவப்பிரம மானது (சீவ) ஆன்மா எனவும் நிச்சயிக்கப்படுதலான், அவர்கள் அதனை முடிந்த இடமாகக் கோடல் தவரும்.

109. *மாயாவாதிகள் மூலப்பிரகிருதியும், சைவர்கள் மூலப்பிரகிருதியும் தத்து வப்படத்தில் எவ்வாறு குறிக்கப்பட்டன?*

மாயாவாதிகள் மூலப்பிரகிருதி F^1 என்னும் எழுத்தினுலும், சைவர்கள் மூலப்பிரகிருதி F^2 என்னும் எழுத்தினுலும் குறிக்கப்பட்டன.

110. *மாயாவாதிகளுடையவும் சைவர்களுடையவும் புத்தி, அகங்காரம், மனம், சித்தம் என்னும் அந்தக்கரணங்கள் நான்கும் தத்துவப்படத்தில் எவ்வாறு குறிக்கப் பட்டன?*

மாயாவா[illegible]ளுடைய மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன முறையே 2[illegible] 27, 26 என்னும் இலக்கங்களானும், சைவர்களுடைய மனமுதலி[illegible], 21, 23 என்னும் இலக்கங்களானும் குறிக்கப் பட்டன.

111. மாயாவாதிகளுடைய ஞானேந்திரியம் ஐந்தும், வாயுக்கள் பத்தும், கன்மேந்திரியம் ஐந்தும், தன்மாத்திரை ஐந்தும், மகாபூதம் ஐந்தும் தத்துவப்படத்தில் எவ்வாறு குறிக்கப்பட்டன?

அவை முறையே H^1 M^1 J^1 K^1 L^1 என்னும் எழுத்துக்களாற் குறிக்கப்பட்டன.

112. சைவர்களுடைய ஞானேந்திரியம் ஐந்தும், வாயுக்கள்பத்தும், கன்மேந்திரியம் ஐந்தும், தன்மாத்திரை ஐந்தும், பூதாதி ஐந்தும் எவ்வாறு தத்துவப்படத்திற் குறிக்கப்பட்டன?

அவை முறையே H^2 M^2 J^2 K^2 L^2 என்பவைகளாற் குறிக்கப்பட்டன.

113. பஞ்சகஞ்சுகமுறப்போகும் ஆன்மாவும் சிவோபாதியுறப்போகும் பிரமமும் ஒன்றும் என்பது தத்துவப்படத்தில் எவ்வாறு குறிக்கப்பட்டது?

D^1 எழுத்திலிருந்து D^2 எழுத்துவரையும் இழுக்கப்பட்ட புள்ளிரேகையினுற் குறிக்கப்பட்டது.

114. உபாதியுற்ற பசுவும் (சீவனும்) பஞ்சகஞ்சுகமுற்ற (சீவனும்) பசுவுந் தத்துவப்படத்தில் ஒப்பாமென்று எவ்வாறு குறிக்கப்பட்டது?

E^1 எழுத்திலிருந்து E^2 வரையும் இழுக்கப்பட்ட புள்ளிரேகையினுற் குறிக்கப்பட்டது.

115. வைதிக சைவசாஸ்திரத்து மூலப்பிரகிருதியும் மாயாவாதசாஸ்திரத்து மூலப்பிரகிருதியும் ஒன்றுமென்பது எவ்வாறு குறிக்கப்பட்டது?

F^1 எழுத்திலிருந்து F^2 எழுத்துவரையும் இழுக்கப்பட்ட புள்ளிரேகையினுற் குறிக்கப்பட்டது.

116. பரப்பிரகிருதியிலுள்ள சிவதத்துவ சத்திதத்துவத்தினராகிய உமையோடு (ஆதியோடு) கூடிய சிவனும் (பதியும்), மூலப்பிரகிருதிப்பாற்பட்ட சத்துவ குணப்பிரதிவிம்பராகிய ஈசரும் (பதியும்) ஒருவரா?

இல்லை. மூலப்பிரகிருதி அநிர்வசனீயமாய்ப் பொய்ப்பட்டொழிய, அந்தச் சத்துவகுணப் பிரதிவிம்ப ஈசுவரனும் கற்பிதமாய்ப்போமென மாயாவாத சரசுவதிரகசியோபநிடதம், உருத்திரகிருதயோபநிடதம், அன்னபூர்ணியுபநிடத முதலியன கூறுதலானும், முப்பத்தாறும் தத்துவத்தினராகிய உமாசகாய சிவனுர் ஈசகேநாதி முக்கியோபநிடதங்களிலே நித்தியராகக் காணப்படுகின்றாரன்றிக் கற்பிதராக யாண்டும் கூறப்படாமையானும், அவ்வாறு

நித்யோ நித்யாநாஞ்சேதநஶ்சேதநா...

(க. ... 13; ஶ்வே. 6. 13)

"நித்தியப்பொருள்களுள் நித்தியர்; சேதனப்பொருள்களுட் சேதனர்" என்றும்,

ஸஜாத ஐதெ்வம ஸதீஹாஃ வதிவஷதெ।

"ஒருவர் நீர் பிறவாதுள்ளீர் என்னும் இம்மொழிகளைக் கூறிப் பயமுற்று நும்மை அணுகுகின்ருர்" என்றும் (சுவே. 4. 21) ற் புகழப்படுதலானும், இவ்வீசர் கற்பிதராகார் என்பது பெறப்பட்டு, அவ்விரு ஈசரும் ஒருவராகார் என்க.

117. மாயாவாத சாஸ்திரத்து மூலப்பிரகிருதி ரசோகுணப் பிரதிவிம்பனுகிய சீவனும் E[1], சைவசாஸ்திரத்து D[3] என்னும் எழுத்தினுற் குறிக்கப்பட்ட சீவான்மாவும் ஒன்ருமா?

அன்ரும்.

ஸஃகரணொவாயிகாவெஜீவாஃ।

ஜீவஷமீஸவ ஸதம வஸ்தொ நஹி।

"சகல சீவர்களும் அந்தக்கரணுேபாதிகர்; என்னிடத்திலே (பிரமத்திலே) சீவத்தன்மையும் ஈசுரத்தன்மையும் கற்பிக்கப்பட்டன; வாஸ்தவத்தில் இல்லை" என்று மாயாவாத மகாநாராயணுேபநிடதமும் சரசுவதிரகசியோபநிடதமும் கூறலானும், D[3] எழுத்தினுற் குறிக்கப்பட்ட

நஜீவொஷியதெ (சாந். 6. 11. 3)

நஜாயதெ ஷியதெ வா விவஸ்ஜி (க. 2. 18)

"ஜீவான்மான்மா அழிவதில்லை" என்று சாந்தோக்கியோபநிடதமும் கடவல்லியுபநிடதமும் கூறுதலானும், அவ்விரு சீவான்மாவும் பெயரால் ஒன்ருமாயினும் விஷயத்தில் முழுமையும் வேருமென்க.

118. மாயாவாத சாஸ்திரத்து D[1] பிரமத்தைப் பற்றிய மாயாசத்தியும், முப்பத்தாரும் முப்பத்தைந்தாம் சிவதத்துவ சத்திதத்துவத்தினராகிய சிவனுேரோடு கூடிய உமாசத்தியும் ஒன்ருமா?

அன்று; D[1] எழுத்தினுற் குறிக்கப்பட்ட பிரமத்தைப் பற்றிய மாயாசத்தி அத்தியாச (பொய்ச்) சத்தியாய் முடிதலினுனும், முப்பத்தாரும் தத்துவமுடிவினுள்ள சிவனும் உமாசத்தியும் சமவாயசம்பந்தத்தினராய், அக்கினியும் சூடும்போலத் தருமதருமிபாவத்தினுல் தாதான்மியமாய் உளர் என்றும், கிரணம் சூரியனை விட்டிராதவாறுபோலச் சத்தியார் சிவபிரானைப் பிரிந்திலராம்

ஸவரெதா வராஷ்தி ஸ்ரீவவூஸ்வாயிநீ।

தாஷாத்ஷ நயொநிஷ்ஷவெஷி உஷ்ஹகமொஷிவ।

ஸுதஸ்ஸூக்ஷ்மா ஸூக்ஷ்மதரா ஶக்திஃ பராத்மநஃ |
ஸஹஜாஹி விநாயத்நா நாஶேஷ நவிக்ஷ்யதே |
ந ஶிவேந விநா ஶக்திர் ந ஶக்த்யா ச விநா ஶிவஃ ||

என்றும் சைவபுராணோபப்பிருங்கணம் கூறுதலானும், இப்பராசத்தியார் அழிவிலராய், கற்பிதமாகிய மாயாசத்தியினின்று பெரிதும் வேறுபாடுடையராம். (சை. வா. Pt. I. 25. 32; சிவாத்துவித சைவபாஷ்யம் 1. 2. 1; சை. வா. Pt. II. 5: 11, 12)

119. மாயாவாதிகளுடைய சர்வசாரம், நிராலம்பம், தேசோவிந்து, சுகரகசியம், மகோபநிடதம், வராகம், உருத்திரகிருதயம், அன்னபூர்ணி, சாண்டில்லியம், யோகசிகை முதலிய உபநிடதங்களில் அங்கங்கே காணப்படும் மாயோபாதி, கானற்சலம், மலடிமகன், தாணுபுருஷன், வேதாளம், கந்தருவநகரம், இரச்சுசர்ப்பம், அத்தியாசம், ஆரோபம், சொப்பனவுலகு, கற்பனை முதலிய பதவழக்குக்கள் ஈசகேன முதலிய முக்கியோபநிடதங்களிற் காணப்படுகின்றனவா?

இல்லை.

120. ஈசகேநாதி உபநிடதங்களிலே மாயாவாதோபநிடதங்கள் கூறிய பிரகாரம் சீவேசுவரர் கற்பிதராய் மித்தியராய்க் கூறப்படுகின்றனரா?

இல்லை: இவ்வுபநிடதங்களிலே சீவேசுவரர் கற்பிதராகக் கூறப்படாது அத்துவா, (கார்க்கி) ஆகாசம் (சிதம்பரம்), தகராகாசம், வியோமம், பராசத்தி, சிவனருள் (தாதுப்பிரசாதம்), உமாசகாயம், அம்பிகாபதி, உமாபதி, கிருஷ்ணபிங்களம், பொன்வண்ணர், ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம், பிரணவம், விபூதியை உணர்த்துஞ் சிரோவிரதம் பஸ்மம் அத்தியாசிரமம் சாம்பவம் விரதம் பூதி, ஆன்மதத்துவ வித்தியாதத்துவ சிவதத்துவங்கள், பரமசாமியம், பரமாநந்தம், பூமா (முடிவிறந்த இன்பம்), பிரமலோகம் (சிவலோகம்) முதலிய வைதிக சைவப் பத வழக்குக்கள் காணப்படுகின்றன; இவை மாயாவாதோபநிடதங்களிற் காணப்பட்டில.

121. அவ்வீசகேந முதலிய உபநிடதங்கள் யாவை?

அவை ஈச, கேந, கட, பிரசின, முண்டக, மாண்டூக்கிய, ஐதரேய, தைத்திரீய, சாந்தோக்கிய, பிருகதாரணிய, கௌஷீதகிப்பிராம்மண, மகோபநிடத, பிருகச்சாபால, சரப, ஜாபால, கைவல்லிய, காலாக்கினிருத்திர, சுவேதாசுவதர, மைத்திராயண, அதர்வசிரசு, அதர்வசிகை முதலிய உபநிடதங்களாம்.

122. அவ்விருதிறத்து உபநிடதங்களும் வேறுபடுவனவா?

ஆம்: வைஷ்ணவர்களுக்கு நாராயணம் சுபாலமுதலிய உபநிடதங்

கள் உளவாமாறு போல, மாயாவாதிகளுக்கும் சர்வசாரம் நிராலம்பமுதலிய உபநிடதங்கள் உளவாய், அவை ஈசகேநாதி உபநிடதங்களினின்று முற்றும் வேறுபாடுடையனவாம்.

123. மாயாவாதோபநிடதங்களிலே சீவேசுவரர் கற்பிதராகக் கூறப்பட்ட இருவாக்கியங்கள் எடுத்துதகரிக்க?

(*I*) 𑌕𑌾𑌰𑍍𑌯𑍋𑌪𑌾𑌧𑌿𑌰𑌯𑌂 𑌜𑍀𑌵𑌃 𑌕𑌾𑌰𑌣𑍋𑌪𑌾𑌧𑌿𑌰𑍀𑌶𑍍𑌵𑌰𑌃।

"சீவன் காரியோபாதிகன்; ஈசுவரன் காரணோபாதிகன்" என மாயாவாத சுகரகசியோபநிடதமும்

(*II*) 𑌯𑌥𑌾𑌕𑌾𑌶𑍋 𑌘𑌟𑌾𑌕𑌾𑌶𑍋 𑌮𑌠𑌾𑌕𑌾𑌶 𑌇𑌤𑍀𑌰𑌿𑌤𑌃। 𑌤𑌥𑌾
𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍈𑌰𑍍𑌦𑍍𑌵𑌿𑌧𑌾 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑍋 𑌹𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌜𑍀𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑌾॥

"ஆகாசமானது கடாகாசம் என்றும் மடாகாசம் என்றும் கூறப்படுமாறு போல, பிராந்தர்களால் ஆன்மாவானவன் சீவேசுவரரென இருபிரகாரமாகக் கூறப்படுகின்றான்" என மாயாவாத தரிசனோபநிடதமும் கூறுகின்றன.

124. இனி ஈசகேநாதி உபநிடதங்களிற் சீவன் மித்தையாகக் கூறப்படவில்லையென்றமைக்குப் பிரமாணம் என்னை?

(*I*) 𑌨 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌮𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌵𑌾 𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌤𑍍।

"அறிஞன் (ஆன்மா) பிறப்பதில்லை, இறப்பதில்லை" என்று (க. 2. 18) னும்,

(*II*) 𑌨 𑌜𑍀𑌵𑍋 𑌮𑍍𑌰𑌿𑌯𑌤𑍇।

"சீவன் இறப்பதில்லை" என்று (சாங். 6. 11. 3) னும்

(*III*) 𑌜𑍍𑌞𑌾𑌜𑍍𑌞𑍌 𑌦𑍍𑌵𑌾𑌵𑌜𑌾𑌵𑍀𑌶𑌨𑍀𑌶𑍌।

"பிறவாதவராகிய ஞனும் அஞ்ஞனும் (சீவனும்) ஆகிய இருவரும் (முறையே) ஈசரும் *அநீசனுமாம்" என்று (சுவே. 1. 9) னும்

(*IV*) 𑌅𑌮𑍃𑌤𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌹𑌰𑌃।

"அழியாத அக்ஷரமாயுள்ளவன் அரன் (சீவான்மா)" என்று (சுவே. 1. 10) னும்

(*V*) 𑌅𑌮𑍃𑌤𑌂 𑌤𑍁 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾।

"அழியாதது வித்தை (சீவான்மா)" என்று (சுவே. 5.1) னும், மற்றைய உபப்பிருங்கண மகோபப்பிருங்கணங்களினும் ஜீவான்மா அழியாப் பொருள் என்று கூறப்பட்டிருக்கின்றது.

---

*92-ஆம் விஞவிடையிலே பவுட்கராகமமும் இச்சுருதிக்கியைந்து அநீசன் (ஈச னல்லன்) என்று கூறினமை காண்க.

125. மாயாவாதோபநிடதங்களை ஈசகேநாதி உபநிடதங்களினுஞ் சிறந்தன வாய்க் கொண்டு அம்மாயாவாதோபநிடதப் பிரகாரம் யாவரும் பொருள் கொண் டால் என்னை ?

வியாசரருளிய வேதாந்த சூத்திரம் இந்த ஈசகேநாதி உபநிடதப்பொ ருள்களை ஆதாரமாகக் கொண்டு பிறந்தனவன்றி மாயாவாதோபநிடதங்களை ஆதாரமாகக்கொண்டு பிறந்தனவன்று. இவ்வுண்மை வியாசரருளிய வேதாந் தசூத்திரங்களான் உணரப்படும். ஆகலின், மாயாவாதோபநிடதங்களினும் ஈசகேநாதி உபநிடதங்களே முக்கியமாம் என்க.

126. இந்த ஈசகேநாதி உபநிடதங்கள் யாது பெயர் பெறும்?

வைதிக சைவ சிதம்பரோபநிட தங்கள் எனப்படும்.

127. வைதிகசைவம் என்றதில் வைதிகம் சைவம் என்பவற்றைத் தனித்தனி விளக்கி, அவ்வைதிகசைவம் யாதென்றும், அதனைப் பிரதிபாதிக்கும் நூல்கள் யாவை என்றும் நிரூபிக்க ?

இருக்காதி வேதோபநிடதங்களோடு சம்பந்தமுற்றது வைதிகம் எனப் படும்; சிவத்தோடு (ஆன்மா) சம்பந்தமுற்றது சைவம் எனப்படும்; இது பற்றியே "சைவஞ்சிவனுடன்சம்பந்தமாவது" என்று திருமூலரும், "இறைகளோடிசைந்தவின்பமின்பத்தோடிசைந்தவாழ்வு" என்று ஸ்ரீசுந் தரமூர்த்திநாயனரும் அருளினர். இங்ஙனம் ஆன்மாச் சிவத்திலே திளைத்து இன்பமுறும் அத்தியுத்கிருஷ்ட சிவசம்பந்தப்பேரின்ப நிலையைப் "பூமா" என்னும் மொழியினல் உணர்த்துவது வேதோபநிடதமாதலின், வைதிக சைவம் எனப் பெயர் போந்தது. இந்நிலையையே, "அந்தமிலாவானந்த மணிகொடில்லைகண்டேனே" என்று ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகள் அரு ளிச் செய்தனர். உபநிடதங்கள் என்றது 121-ஆம் வினவிடையிற் கண்ட ஈசகேநாதி உபநிடதங்களாம். ஆகவே, இவ்வுபநிடதங்களை ஆதாரமாய்க் கொண்டு கிளர்ந்த வியாசரருளிய பிரமசூத்திரங்களும், அவ்வுபநிடதங்க ளுக்கு உபப்பிருங்கணங்களாகிய இதிகாச சிவபுராணங்களும், மகோபப் பிருங்கணங்களாகிய சிவாகமங்களும் வைதிகசைவத்திறத்தனவாம் என்று நன்கு கடைப்பிடிக்க.

128. யாது காரணத்தினல் அவை வைதிகசைவ சிதம்பரோபநிடதங்கள் என ப்படும்?

சிதம்பரமானது *ஞானகாசம் எனப் பொருட்படலானும், அந்த ஆகாசம் வியோமம் என்பன பரப்பிரகிருதியாகிய பராசத்திக்குப் பெய ராமாற்றை

* திருச்சிற்றம்பலம்.

𑌯𑌸𑍍𑌯 𑌸𑌾 𑌪𑌰𑌮𑌾 𑌦𑍇𑌵𑍀 𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑌾𑌕𑌾𑌶 𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌾।

என்று கூர்மபுராணம் கூறுகின்றமையானும்,

𑌵𑍍𑌯𑍋𑌮𑌸𑌂𑌜𑍍𑌞𑌾 𑌪𑌰𑌾𑌕𑌾𑌷𑍍𑌠𑌾 𑌸𑍇𑌯𑌂 𑌹𑍈𑌮𑌵𑌤𑍀 𑌮𑌤𑌾।

ஐமவதியார் வியோமம் எனப் பெயருடையரென்று (கூர். பூரு. 12) கூறுதலானும், இந்த ஆகாசம் வியோமம் என்னும் பராசத்திப் பிரயோகம் தைத்திரீயம், சாந்தோக்கியம், மகாநாராயணம், சுவேதாசுவதரமுதலிய உபநிடதங்களிற் காணப்படலானும், அவ்வாறு பராசத்தி விலாசப் பெயர்களாய பிரஞ்ஞானம், திருதி முதலியன ஐதரேயம், கடவல்லி, பிருகதாரணிய முதலியவைகளிற் காணப்படலானும், இவ்வுபநிடதங்கள் அநிர்வசனீய மாயா விலாசத்தை விதந்து உரைக்கும் மாயாவாதோபநிடதங்களினின்றும் வேறு பிரித்து வைக்க வைதிகசைவ சிதம்பரவாதோபநிடதங்கள் எனப்பட்டன.

129. *இவ்வுபநிடதமுடிவுகளெல்லாம் எவ்விடத்தில் நிலையுறுகின்றன?*

தகராகாய மகாப்பிரணவநிலையிலே முடிவுறுகின்றன.

130. *பின் சங்கராசாரியர் தமது ஆன்மப் பிரமத்தில் முற்றவும், இராமானுசர் தமது நாராயணப்பிரமத்திலே முற்றவும் ஈசகேநாதி உபநிடதங்களுக்குப் பொருளுரைத்தமை யுக்தமன்றும் என்பதை நிரூபணஞ் செய்க?*

அவ்விருவரும் சுருதிபுராண வாகமப் பிரதிபாதிதராய்ப் பரப்பிரகிருதிப்பாலராயுள்ள உமாசமேத சிவபிரானை மறைத்து, அதோபாகத்துள்ள மூலப்பிரகிருதி பற்றி (போக்தாவையே) ஆன்மாவையே நிர்க்குணமும் சகுணமுமாகக் கொண்டு, அவைகளிலே தத்தம் மாயாவாதோபநிடதப்பொருளையும் நாராயணோபநிடதப்பொருளையும் முறையே முடித்துநின்றமையான், அவர் கொண்ட பொருள் *அமுக்கியமாம் என்க.

---

* A என்பானுடைய வைரிகளாகிய B C D என்பார் தங்களுள்ளே தாங்கள் ஒற்றுமையிலராயவிடத்தும், அந்த A என்பானுடைய சொந்த ஆஸ்தியாகிய நிலத்தைத் தம்முடையதாக்கத் துணிந்து, அந்நிலத்திலே A என்பானுக்குரியவென்று உணர்த்தற்கு நாட்டப்பட்டிருந்த எல்லைக் கற்களைப் பிடுங்கியும், கள்ளச் சாசனங்கள் பிறப்பித்தும், அந்நிலம் அந்த A என்பானுக்குரியதாகாதவாறு செய்தும், அந்நிலமுடையானைத் தூஷித்தும், அந்நிலத்தைத் "தம்முடைய ஆஸ்தி" "தம்முடைய ஆஸ்தி" "பொதுவாகிய ஆஸ்தி" என்று நெடுங்காலமாக எழுதியும், பேசியும் ஆண்டுவருவாராக, அதைக் கண்ட A என்பானுடைய சந்ததியாரும், பந்துக்களும், சிநேகரும், அந்த B C D என்பாருடைய வமிசத்தாரும், அவரைக் கதாநுகதிகநியாயமாகத் தொடர்ந்து நிற்பாரும் அந்நிலம் A என்பானுடையதன்று, B C D என்பார்க்குப் பொதுவாகிய ஆஸ்திபோலுமென்று நம்பியும் சொல்லியும் எழுதியும் வந்தகாலத்தில், அந்த A என்பவன் சந்ததியார்மேற் பூற்றுடையாரொருவனுக்குச் சிற்சில குறிகளால் அந்நிலம் A என்பானுக்குரியதென உண்மை புலப்பட்டவிடத்து, B C D என்பார் இன்ன இன்னவாறு மோசஞ் செய்து

131. க்ஷேத்திரம், க்ஷேத்திரஞ்ஞன், சிவன் என்பவர் யாவர்?

"(ஆன்மதத்துவம்) இருபத்துநான்கும் க்ஷேத்திரம் எனவும், இதற்கு மேலாய ஆன்மா க்ஷேத்திரஞ்ஞன் எனவும், க்ஷேத்திரம் க்ஷேத்திரஞ்ஞன் என்னும் இரண்டையும் தனக்கு ரூபமாகக்கொண்டவர் (முப்பத்தாறும் தத்துவத்தினராகிய) சிவனார்"

அதஶ்சதுர்விம்ஶதிதத்வாநி க்ஷேத்ரஸம்ஜ்ஞேந ஸூரய:|
ப்ராஹு: க்ஷேத்ரஜ்ஞஸம்ஜ்ஞேந ஹ்யாத்மாநம் பரமேஷ்டயா|

அந்த A என்பானுடைய நிலத்தைக் கவர்ந்துகொண்டார் என்றும், A என்பவனுடைய ஆஸ்தி என்றமைக்குப் பிரமாணசாசனம் இன்னது இன்னது என்றும் காட்டி, அந்த A என்பானுக்கே அந்நிலமுரியதென்று நீதிஸ்தலம்வாயிலாகத் திருடீகாரஞ் செய்து காட்டிவிட்டாற் போல, ஈசகேநாதி உபநிடதங்களும் பிரமசூத்திரங்களும் வைதிகசைவருடைய சொந்த ஆஸ்தியேயாக, அவ்வாஸ்திக்குரியராய், அதைப் பராமரித்தற்குப் பூரண அதிகாரிகளாயுற்ற" "முப்பொழுதுந் திருமேனி தீண்டுவார்" எனப்படும் ஆதிசைவப்பிராமணர் திருமேனி தீண்டுதலிலே தங்காலமுழுமையும் போக்கிப் பராக்காயிருந்தாராக, மகாசைவருள்ளும் பெரும்பான்மையும் படித்தவர் இலாது அரியராய்விட, அவ்வாய்ப்பாகிய சமயமுணர்ந்த ஏகான்மவாதாசாரியரும், வைணவாசாரியரும், மத்துவாசாரியருமாகிய மூவரும் அவ்வுபநிடத பிரமசூத்திர ஆஸ்தி வைதிகசைவர்க்குரிய தன்றென்று அவ்வாஸ்திக்குரியராகிய ஆதிசைவரை அலட்சியஞ் செய்தும், பிரமகீதை முதலிய கள்ளச்சாசனங்கள் பிறப்பித்தும், உபநிடதம் பிரமசூத்திரம் என்பன "தம்முடைய" "தம்முடைய" வென்றும், "பொது உபநிடத"மென்றும் காட்டியும், நாட்டியும், எழுதியும், பேசியும், பிரசங்கித்தும் வந்தாராக, அதைக் கண்ட ஆதிசைவரது வமிசத்தாரும் சிவன்மேற் பற்றுடைய பிறரும், அவர்கள் கூறுவது மெய்போலுமென்று மனவருத்தத்தோடு தம்மீது எற்றுந் தூற்றுதல்களையுஞ் சகித்துக்கொண்டு வந்தகாலத்தில், திருவருள் உணர்த்தினமையினாற்போலும் ஏகான்மவாதாசாரியர் முதலாயினோர் உபநிடதங்களுக்கும் பிரமசூத்திரங்களுக்கும் உரைத்த உரைகள் ஒவ்வாவென்றும், அவ்வுபநிடத சூத்திராதிகளுக்குப் பொருளாக ஸ்ரீநீலகண்டசிவாசாரியரும், ஸ்ரீஅரதத்தாசாரியரும், ஸ்ரீஅப்பயதீக்ஷிதரும், ஸ்ரீவேதவியாசரும், சிவபெருமானும் முறையே அருளிய பிரமசூத்திரபாடியங்களும், சதுர்வேததாற்பரியசங்கிரகமும், சிவார்க்கமணிதீபிகையும், சிவபுராணங்களும், சிவாகமங்களும், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருநாவுக்கரசுநாயனார் ஸ்ரீசுந்தரமூர்த்திநாயனார் ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகளாகிய வைதிக சைவ சமயஸ்தாபனாசாரியர்களும், (மெய்கண்டார் முதலிய சந்தானாசாரியர்களும்) அருளிய திராவிடவேத (சித்தாந்த) சாஸ்திரங்களும் பிரமாணமாம் என்றும், அதனால் அவ்வுபநிடத்த பிரமசூத்திரம் வைதிகசைவர்களுடைய சொந்த ஆஸ்தியாமென்றும் எமது "சிவாத்துவித சைவபாடியத் தமிழ் மொழிபெயர்ப்பு"க்கு முதற்கண்ணே வலிய பெரிய கோபுரமாய் நின்ற உபநிடதவுபக்கிரமணிகை பிரமசூத்திரவுபக்கிரமணிகைகளில் விரித்து உலகினர் நீதிஸ்தலத்திலே திருடீகாரஞ் செய்து நிரூபித்திருக்கின்றோம். ஆண்டுக் காண்க.

க்ஷேத்ரக்ஷேத்ரவிதாவேதௌ தாவேவைதஸ்ய ஸ்வயம்ஹ்வ:।
நகிஞ்சித் ஶிவாத்ந்யதிதி ப்ராஹுஸ்தத்வதீக்ஷிண:॥

(இலிங். உத். 15: 13—15)

என்னும் இலிங்கபுராண வசனத்தினுல் அறியப்படுகின்றது. இதனுல் க்ஷேத்திரத்திற் சிறந்தது ஆன்மா எனவும், இதிற் சிறந்தவர் சிவபெருமான் எனவும் பெறப்படுகின்றது.

132. சங்கராசாரியர் இம்மூன்றனுள் எதனைப் பரமான்மா எனக் கொண்டார்?

க்ஷேத்திரஞ்ஞனுகிய ஆன்மாவையே பரமான்மா (பரப்பிரமம்) எனக் கொண்டார். (இதற்குப் பிரமசூத்திர சங்கர பாடியமும், ஈசகேனுதி உபநிடத மாயாவாதபாடியமுமே பிரமாணம்)

133. வைஷ்ணவர் எவரைப் பரமான்மாவாகக் கொண்டார்?

வாசுதேவராகிய க்ஷேத்திரஞ்ஞனையே பரமான்மாவாகக் கொண்டார். இவ்வுண்மை

ஸ வாஸுதேவோ பகவாந் க்ஷேத்ரஜ்ஞ: ஸநாதந:।

வைணவர் இலட்சுமிதந்திரத்திற் கண்டது.

134. சிவன், க்ஷேத்திரஞ்ஞன், க்ஷேத்திரம் என்பன வைதிக சைவசித்தாந்தத்தில் எங்ஙனம் உரைக்கப்படும்?

இவை முறையே பதி, பசு, பாசம் எனப்படும்.

135. சுருதியுபப்பிருங்கணங்களிற் கண்டவாறு பாசம் எப்பெயர்களினுற் கூறப்படும்?

தத்துவப்படத்திற் கண்டவாறு பாசம், போக்கியம், அபரப்பிரமம், அசத், க்ஷரம், ஸ்தாவரம் (அசரம்) முதலிய பெயர்களாற் கூறப்படும்.

136. பசுவாகிய ஆன்மா எப்பெயர்களினுற் கூறப்படுவன்?

ஆன்மா தத்துவப்படத்தில் D² எழுத்தினுற் குறிக்கப்பட்ட கண்ணுகிருதிக்குட் கண்டவாறு போக்தா, பரப்பிரமம், சத்து, அக்ஷரம், சரமுதலிய பெயர்களினுற் கூறப்படுவன்.

137. பதி எப்பெயர்களினுற் கூறப்படுவர்?

தத்துவப்படத்துப் பிரணவாகிருதிக்குட் கண்டவாறு பிரேரிதாரர், மகாதேவப்பிரமம், சதசத்பதி, க்ஷராக்ஷரபரர், தேவதேவர் என்றற்றொடக்கத்த பெயர்களாற் கூறப்படுவர்.

138. *ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் எதனைப் பரமான்மாவாகக் கொண்டு நின்றார்?*

இராமாநுஜாசாரியர் சங்கராசாரியர் என்னும் இருவரும் க்ஷேத்திரஞ்ஞர்களாகிய வாசுதேவரையும் ஆன்மாவையும் முடிவாகப் பரமான்மா எனக்கொண்டு நிற்பாராக, ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் க்ஷேத்திரம் க்ஷேத்திரஞ்ஞன் என்னும் இரண்டையும் உருவமாகக்கொண்டு முப்பத்தாறுந் தத்துவத்தினின்ற தேவதேவராகிய (சிவபெருமானையே) பரமான்மாவாகக் கொண்டு நின்றார்; இவ்வுண்மை சிவாத்துவித சைவபாடியத்து (1. 2. 1.) ற் காணப்படும்.

139. *இராமாநுஜாசாரியர் சங்கராசாரியர் ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் என்னும் மூவரும் எவ்வெப்பாவனைகளில் முற்றிநிற்பர்?*

இராமாநுஜாசாரியரும் சங்கராசாரியரும் முறையே பிரகிருதிப்பாற்பட்ட சகுண நிர்க்குணோபாசனைகளினும், ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் ஆன்மதத்துவ வித்தியாதத்துவ சிவதத்துவங்களினுயர்ந்த சிவதத்துவத்தின்பாற்பட்ட அத்தியாசிரம சிவபாவனையினும் முற்றிநிற்பர்.

140. *சாண்டில்லியோபநிடதாதிகளிலே சகுணம் நிர்க்குணம் என்னும் இரு பாவனைகள் மாத்திரம் கூறப்படவும், அத்தியாசிரம சிவபாவனை என மற்றொன்று கூட்டிப் பாவனை மூன்றும் எனக் கோடற்கட் பிரமாணம் என்னை?*

(121-ஆம் இலக்கத்திற்) கண்ட ஈசகேநாதியுபநிடதங்கள் அத்தியாசிரம பாசுபதோபநிடதங்களாகும். இவ்வுபநிடதங்களிற் கூறப்பட்ட பாவனை அத்தியாசிரமபாவனை எனப்படும்.

141. *பாசுபதத்தின் பரியாய நாமங்கள் யாவை?*

சிரோவிரதம், அத்தியாசிரமம், சாம்பவமுதலியவாம்.

142. *அத்தியாசிரமம் என்றது பாசுபதத்துக்குப் பெயராதற்கட் பிரமாணம் என்னை?*

𑌵𑍍𑌰𑌤𑌂 𑌪𑌾𑌶𑍁𑌪𑌤𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌮𑌥𑌰𑍍𑌵𑌶𑌿𑌰𑌸𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑍌।
𑌵𑍍𑌰𑌤𑌮𑍇𑌤𑌤𑍍𑌸𑌮𑌾𑌚𑌰𑍍𑌯 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍇𑌵 𑌨𑍈𑌷𑍍𑌠𑌿𑌕𑌸𑍍𑌸𑍍𑌮𑍃𑌤𑌃।
𑌸𑍋𑌽𑌤𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌮𑍀𑌚 𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑍋 𑌮𑌹𑌾𑌪𑌾𑌶𑍁𑌪𑌤𑌸𑍍𑌤𑌥𑌾॥

(சை. வா. **Pt. I.** 29: 2, 83)

"வைதிகபாசுபதவிரதம் அதர்வசிரசிற் கூறப்பட்டது; இவ்விரதத்தை அநுஷ்டிப்பவனாகிய நைஷ்டிகன் அத்தியாசிரமி, மகாபாசுபதன் எனப்படுவன்" எனச் சிவபுராணவாயுசங்கிதை கூறுகின்றது.

143. *அத்தியாசிரமம் என்னும் பதம் எவ்வுபநிடதங்களிற் காணப்படுகின்றது?*

𑌅𑌤𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌮𑌿𑌭𑍍𑌯𑌃 '𑌪𑌰𑌮𑌂 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂' என்று (சுவே. 6. 21) னும்,

அத்யாஶ்ரமஸ்த: ஸகலேந்த்ரியாணி நிருத்ய பக்த்யா ஸ்வகுரும் ப்ரணம்ய

என்று கைவல்லியத்தினும் அத்தியாசிரமபதம் காணப்படுகின்றது.

144. முண்டகோபநிடதத்து முதற்கண்ணே காணப்படும் அபரவித்தையைக் குறிக்குங்கால் அவ்வுபநிடதத்து இறுதிக்கண்ணுள்ள சிரோவிரதம் எதனை உணர்த்தும்?

ஆதர்வணிகர் அத்தியயனஞ் செய்தற்கு அங்கமாயுள்ள அக்கினிதாரணத்தைக் குறிக்கும்.

145. பரவித்தையைக் குறிக்குங்காற் சிரோவிரதம் எப்பொருள் பயக்கும்?

பாசுபதவிரதத்தைக் குறிக்கும்.

146. இதற்குப் பிரமாணம் என்னை?

வேதாந்தசூத்திரத்து மூன்றும் அத்தியாயத்து மூன்றும் பாதத்து மூன்றும் சூத்திரத்துக்கு ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் எழுதிய பாஷ்யத்துக்குத் தீபமாய் நின்ற ஸ்ரீ அப்பயதீக்ஷிதர் கடாவிடைகளோடு முடித்துக் காட்டிய சிவார்க்கமணிதீபிகையும் பஸ்மவாதாவளியுமே பிரமாணம்.

147. சிரோவிரதம் விரஜாதீக்ஷையை உணர்த்து மென்பதற்குப் பிரமாணம் என்னை?

ஶிரோவ்ரதமிதம் ப்ரோக்தம் ஹ்யுபநிஷத்ஸு வைதிகீ விரஜாதீக்ஷா ப்ரோச்யதே பாபநாஶிநீ। மந்த்ரஸம்ஸ்காரதீக்ஷேதி கத்யதே ஶைவஶாஸநே॥

"உபநிடதங்களிலே இந்தப் பாசுபதவிரதம் சிரோவிரதம் என்று கூறப்படும்; இது பாபத்தைப் போக்கவல்ல வைதிக விரஜாதீக்ஷையாகும்; சிவாகமங்களிலே இது மந்திரசம்ஸ்காரதீக்ஷை எனப்படும்" என்னும் ஸ்காந்தபுராண சனற்குமாரசங்கிதையைச் சார்ந்த காளிகாகண்ட முப்பத்திரண்டாம் அத்தியாய ஐந்தாம் ஆறும் சுலோகங்களே பிரமாணம்.

148. சிவாகமங்களில் யாண்டாயினும் இப்பாசுபதவிரதம் கூறப்படுகின்றதா?

ஆம்.

இதம் விரஜாநலஜம் பஸ்ம।

"பாசவிமோசனஞ் செய்யும் அக்கினியினின்று பெறப்பட்ட விபூதி" என அனலாகமத்திற் கூறப்பட்டது.

149. ஆதலின் ஈசகேநாதி உபநிடதங்களிற் கூறப்படும் பிரமபாவனை எவ்வுபாசனை எனப்படும்?

அத்தியாசிரமபாவனை எனப்படும்.

150. அத்தியாசிரமம் என்றதற்குப் பரமஹம்சசந்நியாசி எனவும், சிரோவிரதம் என்றதற்கு அக்கினிதாரணம் எனவும் சங்கராசாரியர் பொருள்கொண்டவாறு கொண்டால் என்னை ?

𑌇𑌤𑌿𑌹𑌾𑌸𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑍇𑌦𑌂 𑌸𑌮𑍁𑌪𑌬𑍃𑌂𑌹𑌯𑍇𑌤𑍍।
𑌬𑌿𑌭𑍇𑌤𑍍𑌯𑌲𑍍𑌪𑌶𑍍𑌰𑍁𑌤𑌾𑌦𑍍𑌵𑍇𑌦𑍋 𑌮𑌾𑌮𑌯𑌂 𑌪𑍍𑌰𑌹𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿॥

(மகா. ஆதி. 1. 264, 265)

"வேதத்தை இதிகாசபுராண வாயிலாகப் பொருட்படுத்துக; (அங்ஙனஞ் செய்யாத) சிற்றறிவுடையானொருவன் தன்னைக் கொன்றுவிடுவனென வேதம் அஞ்சுகின்றது" என்று மகாபாரதத்திற் கூறப்பட்டமையான், இதிகாசபுராணத்தைத் தழுவாது அவர் எழுதிய பொருள் ஒவ்வாது.

151. இராமாநுஜாசாரியர் சங்கராசாரியர் ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் என்னும் மூவருள் எவர் முற்பட்டவர் ?

ஸ்ரீநீலகண்டசிவாசாரியரே இம்மூவருள்ளும் முற்பட்டவர், அவர்க்குப் பிற்பட்டவர் சங்கராசாரியர், அவர்க்குப் பிற்பட்டவர் இராமாநுஜாசாரியர் என்க.

152. சங்கராசாரியருக்கு முற்பட்டவர் ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் என்பதற்குப் பிரமாணம் என்னை ?

சிவாத்துவித சைவபாடியத் தமிழ் மொழிபெயர்ப்பின் முதற்கட்போந்த 12-ஆம் பக்கந்தொடுத்து 16-ஆம் பக்கம் வரையும் எழுதப்பட்ட பிரமாணம் பார்க்க.

153. பாவனை எத்தனை வகைப்படும் ?

𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌾𑌂 𑌭𑌾𑌵𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌹𑍁𑌰𑍍𑌭𑍇𑌦𑌾𑌖𑍍𑌯𑌾𑌂 𑌨𑌾𑌮 𑌨𑌿𑌬𑍋𑌧𑌯𑍇।
𑌏𑌕𑌾 𑌮𑌦𑍍𑌵𑌿𑌷𑌯𑌾 𑌤𑌤𑍍𑌰 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌾𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌾।
𑌅𑌨𑍍𑌯𑌾 𑌚 𑌭𑌾𑌵𑌨𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍀 𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌾 𑌸𑌾 𑌗𑍁𑌣𑌾𑌤𑌿𑌗𑌾।
𑌆𑌸𑌾𑌮𑌨𑍍𑌯𑌤𑌮𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌯 𑌭𑌾𑌵𑌨𑌾𑌂 𑌭𑌾𑌵𑌯𑍇𑌦𑍍𑌬𑍁𑌧𑌃।
𑌅𑌶𑌕𑍍𑌤𑌸𑍍𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑍇𑌦𑌾𑌦𑍍𑌯𑌾𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌷𑌾 𑌵𑍈𑌦𑌿𑌕𑍀 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃॥

இந்திரத்தியும்நர் கூர்மராம் நாராயணரை நோக்கி, "சுவாமீ! மூவித பாவனையையும் எனக்கு அருளுக" என்று வேண்ட, நாராயணர் "முதலாவது பாவனை என் விஷயம் (சகுணவிஷயம்), இரண்டாவது பாவனை அவ்வியக்தம் (நிர்க்குணம்) பற்றியது, மூன்றாவது பாவனை முக்குணங்களைக் கடந்த பிராமிபாவனை, இம்மூன்று பாவனைகளுள் ஒன்றை அறிஞன் பாவிக்க; அசக்தன் (சகுணபாவனையாகிய) முதலாவது பாவனையையே ஆசிரயிக்க என வைதிகசுருதி கூறிற்று" என்று கூறினர். (கூர். பூர். 1)

154. ஈண்டுக் கூர்மராகிய நாராயணர் சகுணபாவனை யாதென்று கூறினர்?

சகுணபாவனை தமது விஷயம் என்றூர்.

155. சகுணபாவனை நாராயணர் ஒழிந்து மற்றியார்பாலதாகும்?

பிரம உருத்திரருடைய வழிபாடும் சகுணத்தின் பாலதாம். "அசக்தன் உருத்திரரையும் நாராயணரையும் பிரமாவையும் வழிபடுக"

அஶக்தாஶ்சேத்ஸமாராத்ய விஷ்ணும் ப்ரஹ்மாணமேவ ச।

எனக் கூர்மபுராணத்து இறுதி அத்தியாயத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

156. அக்ஷரபாவனை (நிர்க்குணபாவனை) யாது?

பராத்பரதரம் தத்வம் பரம் ப்ரஹ்மைகமவ்யயம்।
நித்யானந்தம் ஸ்வயஞ்ஜ்யோதிரக்ஷரம் தமஸ: பரம்॥
ஐஶ்வர்யம் தஸ்ய யந்நித்யம் விபூதிரிதி கீயதே।
கார்யம் ஜகததாவ்யக்தம் காரணம் ஶுத்தமக்ஷரம்॥
அஹம் ஹி ஸர்வபூதாநாமந்தர்யாமீஶ்வர: பர:।
ஸர்கஸ்தித்யந்தகர்த்ருத்வப்ரவ்ருத்திர்மம கீயதே॥
ஏதத்விஜ்ஞாய பாவேந யதாவத்வைதம் த்விஜா:।
ததஸ்ஸம்ஸேவயேதாதௌ கர்மயோகம் ஸனாதனம்॥

"மூலப்பிரகிருதிக்கு (தமசுக்கு) மேலாயும், சோதியாயும், அக்ஷரமாயும், சச்சிதாநந்தமாயும், அவ்வியக்தமாயும், பரத்துக்குமேலதிபரமாயும், பரதத்துவமாயுமுள்ளது பிரமம்; அதின் ஐசுவரியம் விபூதி எனப்படும்; காரியம் உலகம்; காரணம் சுத்தமும் அக்ஷரமுமாகிய அவ்வியக்தம்; சர்வபூதங்களுக்கும் அந்தரியாமியாகிய பரமேசுவரன் நான்; சிருட்டி திதி சங்கார கிருத்தியம் என்னுடையதாகும்; (குருவுபதேசத்தினுலே) இவ்வாய்மையை உள்ளவாறு அறிந்து கன்மயோகத்தினுலே எக்காலமும் வழிபடுக" என்று கூர்மபுராணத்து முதலாம் அத்தியாயத்தில் இரண்டாவதுபாவனையாகிய நிர்க்குணேபாசனை கூறப்பட்டது. (கூர். பூர். 1)

157. இந்நிர்க்குணேபாசனை மற்றெப்பெயர்களாற் கூறப்படும்?

அக்ஷரபாவனையெனவும், நிர்ப்பீஜயோகமெனவும், அபாவயோகமெனவும், சாங்கியயோகமெனவும், அவ்வியக்தபாவனையெனவும், கர்மயோகமெனவும் படும்.

158. இதுதான் மாயாவாதிகளுடைய நிர்க்குணேபாசனை என்று வேறு பிரமாணங்களால் திருடீகாரஞ் செய்க?

விஶ்வாஸாதிகுணஸ்தம் பராத்பரதரம் விதுர்யதே।

"விக்ற்பம் ஒழிந்த தத்துவமே பரம் எனப்படும்" எனவும்,

ஶிவோ யதா நிஜம் ரூபம் பரமைஶ்வர்யபூர்வகம்।

"ஆன்மா பரமைசுவரிய பூருவமாகத் தனது ரூபத்தை" எனவும் சைவ புராண கைலாசசங்கிதையினும்,

போக்தாரமக்ஷரம் புத்தம் ஸாக்ஷிணம் ப்ரக்ருதே: பரம்।
போக்தாரக்ஷரம்பாஹும் ஸர்வத்ர ஸமவஸ்திதம்।
ஆத்மாயம் கேவல ஸ்வச்சஶ்ஶுத்தஸ்ஸூக்ஷ்மஸ்ஸநாதந:।
அஸ்தி ஸர்வாந்தரஸ்ஸாக்ஷா சிந்மாத்ரஸ்தமஸ: பர:॥

"போக்தாவும் அக்ஷரமும் புத்தமுமாயுள்ள சாட்சியை அறிஞர்கள் பிரகிருதிக்கு மேலுள்ளதாகச் சொல்லுகின்றார்; இவ்வான்மா தனியாயும், சுவச்சமாயும், சுத்தமாயும், சூட்சுமமாயும், சர்வாந்தரியாமியாயும், சின்மாத்திரமாயும், தமசுக்கு மேலாயும் உள்ளது" எனக் கூர்மபுராணத்துச் சாங்கியயோகம் உரைத்த அத்தியாயத்தினும்,

ஸர்வக்ஷேத்ரேஷ்வநுஸ்யூதகேந யதா ப்ரகாஶதே ஸூத்ரதயாந்தர்யாமீத்யுச்யதே।

"அகம் என்னும் பதத்தினற் குறிக்கப்பட்ட ஆன்மா மணிகளின் நூல் போலத் தொடர்ச்சியாய்ச் சர்வசரீரங்களுக்குள்ளிருந்து நியாமகனுய்ப் பிரகாசிக்குங்கால் அந்தரியாமி எனப்படுவன்" எனச் சர்வசாரோபநிடதத்தினும்,

அஹமேவ ஹி ஶுத்தாத்மா அஹமேவ ஹ்யஹம் ஸதா।
அஹமேவ ஹி நித்யாத்மா அஹமேவ ஹி தத்பர:।
அஹமேவாந்தர்யாமீ சாஹமேவ பரமேஶ்வர:।
ஏவமேதத்ப்ரகாரேண பாவயித்வா ஸதா ஸ்வயம்॥

"நானே சுத்தாத்துமா, நானே எப்போதும் நான், நான்தான் நித்தியாத்துமா, நான்தான் தற்பரன், நான்தான் அந்தரியாமி, நானே பரமேசுவரன் என இந்தப் பிரகாரம் (நிருபசரிதமாய்) எக்காலமும் பாவிக்க" என ரிபுகீதையினுங் கூறப்படலான், மேலே (156-ஆம்) இலக்கத்துக் குறித்த பாவனை நிர்க்குணோபாசனையே என வலியுறுத்தப்பட்டது. (சிவரகசியம், அம்சம் 6, அத்தியாயம். 46)

159. மூன்றாவது பாவனை யாது?

த்ருதீயா பாவநாத்ருஷ்டா ஸோஹம் நிஶ்சயசோதிஷ்டிக்ருஹ:।
ஸத்யஸ்யஸர்வகர்மாணி பரம் ஶிவாத்ம ஸாஶ்ரித:।
ஶுத்தாத்மா நஶ்சிக்ஷ்ய ஸ்வாத்மநா ஸர்வஶோ ஜகத்।

[illegible]
[illegible]

"புத்திராதியரிடத்துள்ள பற்றை அறுத்து நிர்த்துவந்துவனுய், நிஷ்பரிக்கிரகனுய், சர்வகன்மங்களுமொழிந்து மிக்க வைராக்கியமுடையனுய், பரமைசுவரியம் பூண்டவன் பாசுபதயோகநெறியானே, ஆன்மாவிலே (அருட்) பராசத்தியோடு பரமான்மாவாகிய சிவபிரானைக் கண்டு, பின்னர்த் தனக்குப் பரமான்மாவாயுள்ளவரிலே உலகம் எல்லாம் இருப்பனவாகநோக்கி, இங்ஙனம் அக்ஷரபாவனை பூருவமாக (நிர்க்குணோபாசனை வாயிலாக) எய்தும் இந்த இறுதியாகிய பிராமிபாவனையை அடைதலாம் பரமயோகத்தினுலே ஏகராகிய சிவபிரானுரைக் காண்கின்றுன்" எனக் கூர்மபுராணம் மூன்றுவது பாவனையை விதந்து கூறிற்று. (கூர். பூர். 1)

160. பராசத்தியோடு கூடிய இப்பாவனை மற்றெவ்வாறு திருடீகாரஞ் செய்யப்படும்?

"சிரௌதஸ்மார்த்தக்கிரியையினுலாவது, புதல்வனையுடைமையினுலாவது, பொருளுடைமையினுலாவது, அப்பிரமவித்தை கிட்டாது; பின் இம்மூன்றையும் பரித்தியாகஞ் செய்தலினற் சிவத்துவம் அடைந்தார் பெரியோர்"

[illegible]

என உமையாரோடு கூடிய சிவனுரது பாவனை உரைக்கும் அத்தியாசிரம கைவல்லியோபநிடதம் கூறுமாற்றுனும், "அநேக சென்மங்களிலே முற்றிய வைதிக ஸ்மார்த்த கருமங்களையுடையராய் அதனுற் பற்றற்றவராய் அறிவுடையராய் எய்தினேர்க்கே சிவபிரான் அருள்பாலிக்கின்றுர்"

[illegible]
[illegible]

எனப் பாசுபதயோகம் கூறுமிடத்து, வாயுசம்மிதை கூறுமாற்றுனும் உணர்க. (சை. வா. Pt. II. 8: 29) "ஆன்மாவில் ஆன்மாவை" என்றவிடத்து, ஏழாம் வேற்றுமையில் நின்ற "ஆன்மா" சீவான்மாவின்மேலும், இரண்டாம் வேற்றுமையில் நின்ற ஆன்மா (சிற்சத்தியோடியைந்த) பரமான்மாவின் மேலுமாயிற்று;

[illegible]

"சிவமும் சத்தியும் இசைந்ததே பரமான்மா என நிச்சயிக்கப்படும்" என்றும், (சை. கை. 10: 134)

[illegible]
[illegible]

"சைதன்னியம் என்பது சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவமாகிய சுவாதந்தி ரியம்; அதனை எவர் இயல்பாகவுடையரோ அவர் ஆன்மா எனக் கூறப்பட்ட னர்" என்றும் கைலாசசங்கிதை கூறுதலானும், (சை. கை. 10: 126)

நாநயோரந்தரம் வித்யாச் சந்த்ரசந்த்ரிகயோரிவ।
சந்த்ரோ நபஸா பாதெ த்ருஶ்யயதா சந்த்ரிகயா விநா।
ந பாதி வித்யமாநோऽபி தயா ஶக்த்யா விநா ஶிவ꞉।
ப்ரபயா ஹி விநா யத்வத் பாநுரேஷ ந வித்யதே।
ஏவம் பரஸ்பராபேக்ஷா ஶக்திஶக்திமதோ꞉ ஸ்திதி꞉।
ஸமவேதா பராஶக்தி ஶிவஸ்ய ஸமவாயிநீ।
தாதாத்ம்யமநயோர்நித்யம் வஹ்நிதாஹகயோரிவ।
ஸதத்தர்மதர்மித்வாச்ச பராஶக்தி꞉ பராத்மந꞉॥

"சந்திரனும் சந்திரிகையும் போலச் சிவனார்க்கும் சத்தியார்க்கும் பேதம் இல்லை; சந்திரிகையின்றிச் சந்திரன் பிரகாசியாததுபோலச் சிவனார் சத்தி யைவிட்டு விளங்கார்; கிரணத்தை விட்டுச் சூரியன் இல்லையாமாறுபோலச் சத்திக்கும் சத்திமானாகிய சிவபிரானுக்கும் பரஸ்பரம் அபேக்ஷா ஸ்திதி உளது; பராசத்தியார் சிவனார்க்குச் சமவாயசம்பந்தத்தோடுற்றனர்; அக் கினியும் சூடும்போலப் பராசத்தியும் பரமான்மாவும் குணகுணித்தன்மை யினர்" என்று வாயுசங்கிதை கூறலானும் (சை. வா. Pt. II. 5: 9—12); (சி. க. பா. 1. 2. 1),

தமாத்மஸ்தம் யேऽநுபஶ்யந்தி தீராஸ்தேஷாம் ஸுகம் ஶாஶ்வதம் நேதரேஷாம்॥

என்னும் கடவல்லி சுவேதாசுவதர அதர்வசிரோபநிடதங்களிலே காணப் படும் மந்திரத்துக்கு வேதவியாசர் "பராசத்தியோடுகூடச் சிவத்தைச் சிந் தையிற் காண்கின்றவர்க்கு நித்தியமாகிய பேரின்பம், மற்றோர்க்கின்றாம்" (க. 5: 12, 13; சுவே. 6. 12; சி. 5)

தஸ்மாச்ச ஸஹிதயா ஶக்த்யா ஹ்ருதி பஶ்யந்தி யே ஶிவம்।
தேஷாம் ஶாஶ்வதிகீ ஶாந்திர்நேதரேஷாமிதி ஶ்ருதி꞉॥

என்று வாயுசங்கிதாவுபப்பிருங்கணம் கூறினமையானும், மூன்றாவது பாவ னைப்பொருள் அருட் பராசத்தியோடுகூடிய சிவபாவனையில் முற்றியதெனை வலியுறுத்தப்படும். (சை. வா. Pt. II. 8: 20)

161. இம்மூன்று பாவனையும் மற்றெவ்வாறு கூறப்படும்?

அவை முறையே பௌதிகயோகம், சாங்கியயோகம், அத்தியாசிரம யோகம் என்று கூறப்படும்.

162. இங்ஙனம் மூவகைப்படுத்துக் கூறுதற்கட் பிரமாணம் என்னை ?

யோகீ ச த்ரிவிதோ ஜ்ஞேயோ பௌதிக: ஸாம்க்ய ஏவ ச।
த்ருதீயோऽத்யாஶ்ரமீ ப்ரோக்தோ யோகமுத்தமமாஸ்தித:॥
ப்ரதமா பாவநா பூர்வே ஸாம்க்யே த்வக்ஷரபாவநா।
த்ருதீயே சாந்திமா ப்ரோக்தா பாவநா பாரமேஶ்வரீ॥

"யோகியாவான் பௌதிகயோகியும், சாங்கியயோகியும், அத்தியாசிரமயோகியும் என மூவகைப்படுவன் என்றும், (கூர்மபுராணத்து முதலாம் அத்தியாயத்தில் உபதேசிக்கப்பட்ட) நாராயண விஷயமாகிய முதலாவது பாவனை **பௌதிகயோகம்** என்றும், அவ்வியக்த (அக்ஷர) பாவனை **சாங்கியயோகம் (நிர்க்குணயோகம்)** என்றும், மூன்ருவதாகிய இறுதிப் பிராமிபாவனை (பரமேசுவரபாவனை) **அத்தியாசிரமயோகம்**" என்றும் கூறிய கூர்மபுராண இரண்டாம் அத்தியாயசுலோகங்களே பிரமாணம்.

163. சாங்கியம் என்பது நிரீச்சுவரசாங்கியத்தின் மேலதேயாக, நிர்க்குணோபாசனை எனப் பொருள்கோடற்கட் பிரமாணம் என்னை ?

"**சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம், வைதிகம், பாசுபதம் என்பன வெவ்வேறு வகைப்பட்ட மதங்கள்**"

ஸாம்க்யம் யோக: பாஞ்சராத்ரம் வேதா: பாஶுபதம் ததா।
ஜ்ஞாநாந்யேதாநி ராஜர்ஷே வித்தி நாநாமதாநி வை॥
(மகாபா. சாந்திபருவம். 349: 63)

என மகாபாரதத்திலே கூறப்பட்ட சாங்கியம் நிரீச்சுவரசாங்கியமேயாக, "**சாங்கியம் வேதாந்தவிசாரம், யோகம்** நிர்க்குணப் பிரமோபாசனை"

ஸாம்க்யம் நாம வேதாந்தவிசார: யோகஶ்சரமம் நிர்குண ப்ரஹ்மோபாஸநம்।

என்று சித்தாந்தலேசசங்கிரகமும்,

அஜ்ஞாநேநாவ்ருதம் லோகோ விஜ்ஞாநம் தேந முஹ்யதி।
விஜ்ஞாநம் நிர்மலம் ஸூக்ஷ்மம் நிர்விகல்பம் ததவ்யயம்।
அஜ்ஞாநமிதரத்ஸர்வம் விஜ்ஞாநமிதி தந்மதம்।
ஏதத்வ: கதிதம் ஸாம்க்யம் பாஷிதம் ஜ்ஞாநமுத்தமம்॥
(கூர், உத். உ.)

"அஞ்ஞானத்தினலே உலகம் மூடுண்டது ; அதனல் அறிவுமயங்குகின்றது; இந்த அறிவு நிர்மலமும் சூக்குமமும் நிர்விகற்பமும் அவ்வியயமுமாயுள்ளது, இந்த அறிவை ஒழிந்து மற்றெல்லாம் அஞ்ஞானம்; இவ்வாறு உங்களுக்குக் கூறப்பட்ட **நிர்க்குண்ஞானமே (சாங்கிய ஞானமே) உத்தமமான**

ஞானம்'' என்று கூர்மபுரர்ணத்து ஈசுரகிதைச்சாங்கியயோகாத்தியாயமும் கூறுதலே சாங்கியயோகம் நிர்க்குணேபாசனையின் மேற்றென்றமைக்குப் பிரமாணம். ஆகவே, மகாபாரதத்திற் கூறப்பட்ட சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம், வைதிகம், பாசுபதம் என்னும் ஐந்தும் ஒன்றுக்கொன்று உயர்ச்சியுடையனவாம் என்றும், பாஞ்சராத்திரம் சகுணத்தின்பாலும், வைதிகம் நிர்க்குணேபாசனையின்பாலும், பாசுபதம் அத்தியாசிரமபாவனை யின்பாலும் நின்றவாறு உணர்க. இதுபற்றியே, இலிங்கபுராணம் பாசுபத யோகத்தை மோக்ஷத்துக்கு வாய்ந்த அத்தியாசிரமம்

[illegible]
[illegible]

என்று கூறிற்று (இலிங். உத். 55: 26, 27). கூர்மபுராணத்துப் பதினாறும் அத்தியாயத்திற் காபாலம், லாகுளம், வாமம், பைரவம் என்பவற்றோடு படிக்கப்பட்ட பாசுபதம் வைதிக பாசுபதத்தின் வேறாகிய அவைதிகபாசு பதம் எனவும், "இரகசியத்தினும் இரகசியமாய்ச் சூட்சுமமாய் முக்தியின் பொருட்டு வேதசாரமாயுமுள்ள சிரௌதபாசுபதம் சிவனால் ஆக்கப்பட் டது எனவும், வேதாப்பியாசத்தில் விருப்பமுடைய அறிஞன் பசுபதியாகிய சிவபிரானைத் தியானிக்க எனவும், இந்தப் பாசுபதயோகம் முமூட்சுக்களாற் சேவிக்கற்பாலதொன்றும் எனவும், வேத விருத்தமாய்ச் சிவனால் இயற்றப் பட்ட வாமம், பாசுபதம், சோமம், லாகுளம், பைரவம் என்னும் வேத பாகிய சமயங்கள் முமூட்சுக்களாற் சேவிக்கப்பாலனவன்றும்''

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

எனவும் வைதிகபாசுபதம் அவைதிகபாசுபதம் என்னும் இரண்டும் கூர்ம புராணவுத்தரபாகத்து முப்பத்தெட்டாம் அத்தியாயத்திலே பிரித்து விளக் கப்பட்டன.

164. வைதிக பாசுபத விரதம் எவ்வியல்பிற்று?

அதர்வசிரசிலே கூறப்பட்ட பாசுபதவிரதம், சித்திரா பௌர்ணமி முதலியவாகக் குறிக்கப்பட்ட புண்ணியகாலங்களிலே சிவாலயமுதலிய

